DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Affidavits for Immigration purposes;
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1286 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday November 27, 2020

# உடனிருந்த தோழனே! உயிர் துறந்த வேங்கையே! ஒற்றைக் காலில் நின்று உன் உறைவிடத்திற்கு ஒளியேற்றுகின்றேன் ஏற்றுக்கொள் மாவீரனே...



## கோவிட்-19 தடுப்பூசிக்குரிய அங்கீகாரத்தை கனடாவின் மத்திய சுகாதாரப் பிரிவு டிசம்பர் மாத நடுப்பகுதியில் வழங்கும்



(ரொரன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)

உலகெங்கும் வாழும் மக்களில் 14 இலட்சத்திற்கு அதிகமானவர்களை பலியெடுத்தும் கோடிக்கணக்கான மக்களை அச்சுறுத்திக் கொண்டும் உள்ள கொரோனா என்னும் நோய்க்கு காரணமாக கோவிட்-19 தடுப்பூசிக்குரிய அங்கீகாரத்தை கனடிய சு-காதாரப் பிரிவின் உயர் பீடம் டிசம்பர் மாத நடுப்பகுதியில் வழங்கும் நேற்று கனடிய சுகாதார நடுவத்தின் வைத்தியப் பிரிவைச் சேர்ந்த விஞ்ஞானி ஒருவர் தெரிவித்தார். மேற்படி தடுப்பூசி தொடர்பாக கனடிய அரசு சார்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட கனடாவின் மத்திய பொதுச் சேவைகள் மற்றும் கொள்வனவு ஆகியவற்றுக்கு பொறுப்பான அமைச்சரான அனிற்றா ஆனந்த் ஊடகங்களுக்கு தகவல் தருகையில்,

"கனடாவில் தற்போது இந்த தடுப்பூசியை தயாரிக்கும் எந்த நிறுவனமும் கண்டறிப்படாத காரணத்தால் வெளிநாடுகளிலிருந்தே தடுப்பூசியை கனடாவிற்கு இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. எனி-னும் நாம் இறக்குமதி செய்யப்போகின்ற தடுப்பூசியை சுகாதார ரீதியாகவும் தர ரீ-தியாவும் அங்கீகரிக்கும் பொறுப்பு கனடிய மத்திய அரசின் கீழ் வரும் சுகாதாரப் பிரிவில் பணியாற்றும் விஞ்ஞானிகளுக்கே உண்டு. எனவே அந்த அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னரேயே தடுப்பூசியை பெரிய எண்ணிக்கை கடனாவிற்கு இறக்குமதி செய்யமுடியும், மேலும் அனுமதியைப் பெற்றுக்கொண்டால் மட்டுமே தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்குரிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு கொள்வனவு பத்திரங்களை அனுப்பி வைக்க முடியும்" என்றார்.

மேற்படி விடயம் தொடர்பாக கனடாவின் மத்திய சுகாதாரப் பிரிவின் பிரதம மருத்துவ ஆலோசகரான கலாநிதி சுப்பிரியா சர்மா ஊடகங்களுக்கு தகவல் தருகையில்" இந்த அங்கீகாரத்தை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள கனடாவின்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905 794 4404

அறிவித்தல்களை உலகெங்கும் உடனுக்குடன் உங்கள் உறவுகளுக்கு கொண்டு செல்ல வேண்டுமா?
எமது கனடா உதயன் பத்திரிகையின் இணையத்தளமான www.uthyannews.ca இல் பிரசுரமாகும் அறிவித்தல்கள் மற்றும் அவசர விளம்பரங்கள் உதயன் பத்திரிகையிலும் அத்துடன் எமது சகோதர இணையத்தளங்களான www.nanban.ca மற்றும் www.voicefilankai.lk ஆகியவற்றில் பிரசுரம் செய்யப்படும்.
உதயன் | நண்பன் | Voice of ilankai | World Wide Web
தொலைபேசி இலக்கங்கள்: கனடா +1 416-587-0552 கொழும்பு: +94 777 555 026 யாழ்ப்பாணம்: +94 7666143 074 சென்னை: +91 784500 6977

# MORTGAGE SOLUTIONS

# $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS

## 416.298.2777

# $375 Mo.

www.mortgageSolutions.ca

## MONTHLY SAVING $2,478

## SAVE UPTO 75% REFINANCE



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

## BASEMENT வாடகைக்கு உண்டு

Birchmount / Eglinton
சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement with separate entrance
மற்றும் எல்லாவித வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Close to TTC, subway, & shopping.
குடும்பம் விரும்பத்தக்கது.

Call: (416) 821-2181

## விசேட வாழைஇலைச் சாப்பாடு. ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்

ஸ்காபுறோவில்
மோர்னிங்சைட் - செப்பர்ட்
சந்திப்புக்கு அருகில்
வாழை இலைச்சாப்பாடு மற்றும் Lumprice ஆகியவற்றை ஓடர் செய்து பெற்றுச் செல்லுங்கள்.
வெள்ளிக்கிழமைகளில்
வாழை இலையில் 6 மரக்கறிகளுடன் சாப்பாடு - $6.50.
சனிக்கிழமைகளில் மட்டன், சிக்கன் Lumprice - $14.00 மட்டுமே.

Call: (416) 832-6345

உதயன் கதிரோட்டம்

# மாவீரர் நாள் ஒரு மகத்தான நினைவு நாள்

மாவீரர்களை நினைவு கூரும் நாளான இன்று கார்த்திகை 27ம் திகதிக்கு எமது இனம் கொடுத்து வந்த முக்கியத்துவம் இந்த வருடம் செயல் வடிவத்தில் பின்னடைந்துள்ளது.

எமது தாயகத்தில் அடக்குமுறை அரசின் ஏவல் நாய்களாம் இராணுவமும் காவல்துறையும் மக்களையும் மாவீரர் குடும்பங்களையும் அச்சுறுத்தியும், நீதி மன்றங்கள் மூலமாக வாதிட்டுப் பார்த்த எமது தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் போன்றோர்களின் கைகளைக் கட்டியும் வாய்களை மூடியும் சட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்ட தந்திரங்கள் அங்கே உளரீதியாக மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

புலம் பெயர்ந்த நாடுகளிலே மிகவும் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டு வந்த இந்த வருடாந்த நினைவேந்தல் நிகழ்வுகள் கொடிய தொற்று நோய் காரணமாக அமுல்செய்யப்பட்ட அரசு சார்ந்த சட்டங்கள் மூலமாக அமைதிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால் மறைந்த மாவீரர்களுக்காக உலகெங்கும் ஊடக நிறுவனங்கள் தங்கள் பங்கை இயன்றளவு ஆற்றியுள்ளார்கள் என்பதும் உண்மை. அந்த வகையில் எமது ஊடக நிறுவனம் மறைந்த மாவீரச் செல்வங்களின் குடும்பங்களின் உறவுகளோடு கைகோர்த்து அவர்கள் இழந்து நிற்கும் வேங்கைகளை வணங்கி நிற்கின்றோம்.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும், புலம் பெயர்ந்த நாடுகளிலும் தளர்ந்த நிலையில் உணர்வுகளை நாம் மிகவும் அடக்கமாகப் பகிர்ந்து கொண்டாலும் இலங்கைப் பாராளுமன்றத்தில் சில அதிசயங்கள் இடம் பெற்றுள்ளன.

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் சிவஞானம் பாராளுமன்றத்திற்குள்ளேயே பல பெரும்பான்மை இன உறுப்பினர்களுக்கு முன்பாக உணர்வுபூர்வமான உரையொன்றை ஆற்றியிருக்கின்றார். அத்தோடு, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைதியாக இருந்து இடையூறு செய்யாமல் செவிமடுத்துள்ளார்கள். இவ்வாறான வேறுபட்ட வகையில் இவ்வருட மாவீரர் நாளை நாம் கடந்து செல்கின்றோம். எவ்வாறாயினும் எவ்விதமான மனச்சோர்வும் இன்றி எமது வழமையான கடமைகளில் கண்ணாயிருந்து இதையும் ஏற்றுக்கொண்டு அடுத்துள்ள பணிகளில் கண்ணாயிருப்போம்!

# "மாவீரர் நாள் என்பது, நாம் மனித உணர்வுகளோடும் எம் இனத்தின் பண்பாட்டோடும் இணைத்து எம் அகக்கண்களால் தரிசிக்கின்ற புனித நாளாகும்"

### பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஸ்ரீதரன் சிவஞானம் தெரிவிப்பு

இலங்கைப் பாராளுமன்றத்தில் நேற்று உறுப்பினர் ஸ்ரீதரன் சிவஞானம் நிகழ்த்திய உரையில், பின்வருமாறு தெரிவித்தார்.

"கார்த்திகை-27 இலங்கைத் தீவிலும், உலகெங்கிலும் பரந்து வாழ்கின்ற தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நெருப்பாய் எரிந்து, அவர்களின் நெஞ்சைப் பிழிந்து தம் பிள்ளைகளின் நினைவுகளைச் சுமக்கும் மகத்தான நாளே மாவீரர் நாள். வாழ்வியலின் அத்தனை சுகபோகங்களையும் துறந்து, 'யாமார்க்கும் குடியல்லோம்' என்கிற மனித சுதந்திர உணர்வின் பிரதிபலிப்பாய் தம் தேச மக்களின் பாதுகாப்பிற்காக தங்கள் இன்னுயிர்களை ஈந்தவர்களின் ஈகைத்திருநாளே மாவீரர் நாள் என்பதால் அதன் யதார்த்தத்தை நான் இங்கு பேச விளைகிறேன்.

மாவீரர் நாள் என்பது மனித உணர்வுகளோடும், ஓர் தேசிய இனத்தின் பண்பாட்டோடும், அதன் பண்பாடு தழுவிய விழுமியங்களோடும் இணைத்து எங்கள் அகக்கண்களால் பார்க்கப்பட வேண்டிய புனித நாள். புத்திர சோகத்தில் துவண்டு போயுள்ள ஒவ்வொரு தாயும், தந்தையும் தங்கள் புதல்வர்களுக்கும், புதல்விகளுக்கும், பெண்கள் தாம் கரம்பிடித்த கணவன்மார்களுக்கும், குழந்தைகள் தங்கள் தாய், தந்தையரின் கல்லறைகளுக்கும் பூக்கள் சொரிந்து, நெய் தீபம் ஏற்றி, அழுது தீர்க்கும் ஆத்மார்த்தமான நாள். கண்ணீரால் தம் உறவுகள் புதையுண்ட நிலங்களை நனைத்து, கல்லறைகளை தங்கள் பிள்ளைகளாய் கருதியவர்கள் அந்தக் கல்லறைகள் உங்களால் தகர்த்தெறியப்பட்ட பின்னர் தம் புதல்வர்கள் புதையுண்ட மண்ணையே தங்கள் பிள்ளைகளாக கட்டியணைத்து அழுது புரள்கின்றார்கள். அந்தத் தாய்மார்களது கண்ணீரையும், ஆற்றாமையையும் பயங்கரவாதம் என்று பச்சை குத்துவது கௌரவ பாராளுமன்றத்திற்கும் அதன் செங்கோல் தர்மத்திற்கும் ஏற்புடையதல்ல. சிங்கள தலைவர்களே! சிங்கள மக்களே! எங்கள் தேசத்தில் கடந்த எழுபது ஆண்டுகளுக்கு மேலாக பாதிக்கப்பட்ட, அழிக்கப்பட்ட இனமாக நாங்கள் இருந்து வருகிறோம். கடந்த பத்து ஆண்டுகளின் முன் யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்ட போதும் யுத்தத்திற்கான அடிப்படைக் காரணங்கள் இதுவரை களையப்படவில்லை. அவை அனைத்தும் எரியும் பிரச்சனைகளாக இன்னும் எம்முன்னே எழுந்து நிற்கின்றன.

அவை பற்றி பேச முனைகிற போதெல்லாம் எங்கள் குரல்வளைகள் மாத்திரமல்ல எம் இனத்தின் குரல்வளைகளே இறுக நெரிக்கப்படுகின்றன. எங்கள் மக்களுடைய கைகள் கட்டப்பட்டு, உணர்வுகள் ஒடுக்கப்பட்டு, வாய்மொழிகள் முடக்கப்பட நீதிமன்றத் தடையுத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. எமது சமூகத்தின் எல்லாச் செயல்களும் பயங்கரவாதம் என பட்டியலிடப்படுகிறது. அத்தகைய கொடூர அடக்குமுறைச் சூழலுக்குள் இருந்து வந்தே இவ்வுரையை நான் நிகழ்த்துகிறேன். மாவீரர்கள் உருவாகிய பின்னணி என்ன என்பதையும், மாவீரர்களின் தியாகத்தின் பின்னணி என்ன என்பதையும் இங்கு பதிவு செய்ய வேண்டியது வரலாற்றின் கடமை என எண்ணுகிறேன். சுதந்திர இலங்கையில் என்ன நிகழ்ந்தது? 1957 இலும், 1965 இலும் இலங்கையில் இனச் சமத்துவத்தை அங்கீகரிக்க அடிப்படையாக அமைந்த பண்டா – செல்வா ஒப்பந்தத்தையும், டட்லி – செல்வா ஒப்பந்தத்தையும் நீங்கள் தான் கிழித்தெறிந்தீர்கள்.

பன்மைத்துவமற்ற அரசியலமைப்பை உருவாக்கினீர்கள், பௌத்தத்தை மட்டும் முதன்மை பெற வைத்தீர்கள், தரப்படுத்தலை மேற்கொண்டீர்கள், தமிழ்மொழியை புறக்கணித்தீர்கள், தமிழர் தாயகத்தில் கூட்டு வாழ்வைச் சிதைத்து குடியேற்றங்களை உருவாக்கினீர்கள், இனவாதிகளை உருவாக்கி எம்மின மக்களை வெட்டிச் சரித்தீர்கள், சொத்துக்களை அழித்து, தீயிட்டுக் கொழுத்தினீர்கள், தமிழ்ப் பெண்களின் மார்புகளில் சிங்கள 'ஸ்ரீ' ஐ கொதிக்கும் தாரால் குறிவைத்தீர்கள், பச்சிளம் குழந்தைகளை கொதித்த தார்ச்சட்டிகளுள் வீசி எறிந்தீர்கள், தமிழ் இளைஞர்களின் கண்களை உயிரோடு தோண்டி எடுத்தீர்கள். நினைத்துப் பாருங்கள், மாவீரர்களை உருவாக்கிய வரலாற்றின் பொறுப்பு யாரிடம் இருக்கிறது என்பதை!

இந்த அவலம் மிகுந்த வரலாற்றால் வெஞ்சினம் கொண்ட இளைஞர்கள் வெகுண்டெழுந்து எமது வரலாற்றைப் படைத்தார்கள். அவர்களையே நாங்கள் மாவீரர்கள் என மனங்களில் வைத்துப் பூசிக்கிறோம்.

அடக்கப்படுகிற போது விடுதலை பெற வேண்டுமென்ற உணர்வு மனித சமூகத்தின் தன்னியல்பான குணாம்சம். அதனையே மாவீரர்கள் செய்தார்கள். அவர்கள் ஒருபோதும் வன்முறையை விரும்பியவர்களல்ல. ஆயுதங்களை அவர்கள் விரும்பி ஏற்றவர்களும் அல்ல. தங்களையும், தங்கள் இனத்தையும் தற்காத்துக் கொள்வதற்காக போராடி அதற்காகவே தங்கள் உயிர்களை ஈந்ததற்கு யார் பொறுப்பு? அன்பான சிங்கள சகோதரர்களே! இன்றும் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். வரலாற்றின் கறை படிந்த அத்தியாயங்களிலிருந்து விடுபட்டு, நல்லெண்ணங்களின் அடிப்படையில் நலம்பெறும் நாட்டை உருவாக்க வேண்டிய வரலாற்றுத் தருணத்தில் கண்ணீர் விட்டு அழவும் தடையுத்தரவு தருகின்றீர்கள்.

ஒவ்வொரு அப்பாவித் தாய், தந்தையின் நெஞ்சிலும் ஆணியால் அடிக்கிறீர்கள், தங்கள் தாய், தந்தையரின் கல்லறைகள் இல்லாது போன காலத்திலும், அவர்கள் புதையுண்ட நிலங்களை முத்தமிடத் துடிக்கின்ற பிள்ளைகளின் தலையிலே சம்மட்டியால் அடிக்கின்றீர்கள். அவர்களை நினைந்து அழுவதும், தொழுவதும் பயங்கரவாதம் என பறைசாற்றுகிறீர்கள். இலங்கை தேசத்தில் வாழ்கின்ற சிங்கள தேசிய இனம் போலவே நாமும் ஓர் தேசிய இனமாக எமக்கென்றோர் தனித்துவமான வரலாற்றுடன் கூடிய பண்பாட்டு, விழுமியங்களோடு இந்த வரலாற்றுத் துயர்களை எல்லாம் மறந்து வாழ முற்படும் வேளையில் சர்வதேச மனித உரிமை சாசனங்களை மீறி, இலங்கையின் உள்நாட்டு அடிப்படை உரிமைகளுக்கு முரணாக, ஜெனீவாவின் 30-1 தீர்மானத்தை முற்றாக நிராகரித்து, சர்வதேச சமவாயங்களின் அடிப்படைக் கோட்பாடுகளைக் கூட அங்கீகரிக்கத் தவறி, எமது சமூக, பண்பாட்டு, விழுமியங்களை நிராகரித்து 'பௌத்த புராண, இதிகாச சிந்தனைகளிலிருந்து சிங்களதேசம் மீண்டு வந்து தமிழ்மக்களுக்கு சமத்துவமான தீர்வொன்றை தருமென்று நான் துளியேனும் நம்பவில்லை' என்ற தமிழீழ தேசியத் தலைவர் மேதகு.வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் சிந்தனையை மெய்ப்பிப்பதாகவே உங்கள் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இந்த வரரலாற்று முரண்பாடுகளைத் தீர்த்து, தர்மத்தின் வழி நின்று, ஓர் சத்திய இலட்சியத்திற்காக தமது இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை அவர்களுக்கான நாளில் நாம் வழிபாடு செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவேண்டுமென வலியுறுத்தி, 'விடுதலை என்பது ஒரு அக்கினிப் பிரவேசம், நெருப்பு நதிகளை நீந்திக்கடக்கும் நீண்ட பயணம், அது தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம்' என்ற தலைவரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்து, விடுதலை வேள்விக்கு தமது இன்னுயிர்களை தியாகித்து, சருகாக மிதிபட்ட தமிழன் மலையாக எழுந்து நிமிர்ந்த தேசிய எழுச்சிக்கு மூச்சாகி நின்ற எம் மாவீரச்செல்வங்களை என் நெஞ்சிருத்தி அஞ்சலித்து நிறைவு செய்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள்



# மாவீரர் நாளை காரணம் காட்டி மர நடுகைக்கும் தடை விதித்த மாங்குளம் காவல்துறையினர்!

மாவீரர் நாள் இடம்பெறும் இந்த வாரத்தில் மரம் நடுகையையும் மேற்கொள்ள முடியாது என மாங்குளம் காவல் துறையினர் தடை விதித்துள்ளனர். முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் நேற்றையதினம் (25) தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட செயலாளர் தவபாலன் தலைமையில் மக்களுக்கு தென்னம் பிள்ளைகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை அவ்விடத்துக்கு வருகை தந்த காவல்துறையினர் மரம் வழங்கும் செயற்பாட்டை உடனடியா நிறுத்துமாறு கோ-ரி தடை செய்ததுடன் இந்த வாரத்தில் சிரமதானம் செய்வதோ, மரம் நடுவதோ, வறுமையில் வாடுபவர்களுக்கு உதவிகள் வழங்குவதோ செய்யமுடியாது. மீறிச்செய்தால் கைது செய்யப்படுவீர்கள். என அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

மாவீரர் நாள் நாளை அனுஷ்ட்டிக்க படவுள்ள நிலையில் இராணுவம் மற்றும் காவல்துறையினர் தமிழர் தாயக பகுதியிலும் குவிக்கப்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரித்துள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்க பட்டுள்ளது.

# விசாரணையை துரிதப்படுத்துங்கள் அல்லது தூக்கிலிடுங்கள் என்கிறார் கைதி தேவதாசன்



தனது கோரிக்கையை நிறைவு செய்யும் இயலுமை தங்களுக்கில்லை என கருதும் பட்சத்தில், அரசியல் யாப்பில் உங்களுக்கு தரப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, மரண தண்டனை வழங்கி தூக்கிலிட உத்தரவிடுமாறு, கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதி கனகசபை தேவதாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில், ஜனாதிபதிக்கு, அவர் அனுப்பியுள்ள கடித்தத்திலேயே, இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், "கனகசபை தேவதாசன், வயது 63, ஆகிய நான் பயங்கரவாதித் தடுப்புச் சடடத்தின் கீழ்க் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக சிறை வைக்கப்பட்டிருக்கிறேன் எனவும் கொழும்பு மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் எனக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட 110 6194/12 மற்றும் 110 5638/11 ஆகிய 2 வழக்குகளிலும் முறையே 20 ஆண்டுச் சிறை மற்றும் ஆயுள் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பை எதிர்த்து தான் மேன்முறையீடு செய்துள்ளதுடன், இந்த வழக்குகளை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர விரும்பி, இரண்டிலும் தனக்காக தானே வாதாடுவதாகத் தெரிவித்துள்ள அவர், ஆனாலும் மேற்படி 2 மேன்முறையீட்டு வழக்குகளும் நீதி நடைமுறையின் வீண் தாமதம் மற்றும் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக: முற்றாக முடங்கிவிட்டன எனவும் கூறியுள்ளார்.

இதன் மூலம், நிரபராதி என நிரூபிக்கும் வாய்ப்பு தனக்கு முற்றாக மறுக்கப்படுகிளதெனத் தெரிவித்துள்ள அவர், தனது அடிப்படை உரிமை அப்பட்டமாக மீறப்படுகிறதெனவம் சாடியுள்ளார்.

"இதனை விளக்கித் தங்களுக்கு சிறையூடாக 6 மாதங்களுக்கு முன்னர் கடிதம் அனுப்பினேன். துரதிர்'டவசமாக, அதற்குப் பதில் இன்னமும் வந்து சேரவில்லை. எனவே இவ்விடயத்தை இன்று வேறுவழியின்றிப் பகிரங்கப்படுத்துகிறேன்.

"எனவே, எனது இந்த 2 மேன்முறையீட்டு வழக்குகளையும் துரித விசாரணைக்குட்படுத்த உத்தரவிட்டு உதவுமாறும் அல்லது இந்த 2 வழக்குகளிலும் நான் பிணை பெற ஆவண செய்துதவுமாறும் கோருகிறேன்" எனவும், அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்சொன்ன கோரிக்கையை நிறைவு செய்யும் இயலுமை தங்களுக்கில்லை எனத் தாங்கள் கருதும் பட்சத்தில், அரசியல் யாப்பில் உங்களுக்கு தரப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, தனது தண்டனையை மரண தண்டனையாக தரமுயர்த்தி, "யுத்தக் குற்றவாளி" என தன்னைப் பிரகடனப்படுத்தி உடனடியாக, பகிரங்கமாக தன்னைத் தூக்கிலிட உத்தரவிடுமாறும், அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# அடைந்த தோல்வியை ட்ரம்ப் அவசியம் ஏற்க வேண்டும் என்ற அழுத்தம் அதிகரிப்பு



உலக மக்கள் எதிர்பார்த்தது போன்று நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜோ பைடன் அவர்களால் தோற்கடிக்கப்பட்ட ட்ரம்ப் அந்தத் தோல்வியை மாற்றும் முயற்சியில் இறங்கி குழப்பவாதிகளான தனது ஆதவாளர்களோடு அமெரிக்காவின் நிர்வாகத்தோடு சவால் விடுத்து நின்றதை அனைவரும் அறிவார்கள்.

ஆனால் தற்போது அந்த குழப்பத்தை ட்ரம்ப உடனேயே கைவிடும்படி பதவியில் உள்ள ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் நெருங்கிய கூட்டாளி ஒருவரும் அவருக்கு வலியுறுத்தியுள்ளார் என அறியப்படுகின்றது.

ஜனாதிபதியின் சட்டவாளர் குழு "நாட்டை வெட்கிக்கச் செய்கிறது" என்று நியூ ஜெர்சி முன்னாள் ஆளுநர் கிறிஸ் கிறிஸ்டி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ட்ரம்ப் தேர்தலில் தனது தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்து வருவதோடு, ஆதாரமின்றி தேர்தல் மோசடிக் குற்றச்சாட்டை சுமத்தி வருகிறார். இது தொடர்பிலான டிரம்பின் சட்ட முயற்சிகளுக்கு அவரின் குடியரசு கட்சியின் பெரும்பான்மையினர் ஆதரவு அளித்து வருகின்றபோதும் அது தொடர்பிலான நிலைப்பாட்டில் இருந்து விலகுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

பென்சில்வேனியாவில் மில்லியன் கணக்கான மின்னஞ்சல் வாக்குகளை செல்லுபடியாக ஆக்கக் கோரும் ட்ரம்ப் பிரசாரக் குழுவின் வழக்கை நீதிமன்றம் தள்ளிவைத்தது அவருக்கு பெரும் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராக இருந்து டிரம்புக்கு ஆளுநர் என்ற வகையில் முதலாமவராக ஆதரவை அளித்த கிறிஸ்டி கூறியதாவது,

"நான் ஜனாதிபதியின் ஆதரவாளராக உள்ளோன். அவருக்காக நான் இரண்டு முறை வாக்களித்தேன். ஆனால் தேர்தல் என்று வரும்போது பல சிக்கல்கள் இருக்கும். நாம் நடக்காத ஒன்றை தொடர்ந்து கூறிக்கொண்டிருக்க முடியாது" என்றார்.

மேலும் சில குடியரசுக் கட்சியினரும் ட்ரம்ப் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். "தேர்தல் முடிவை மாற்றும் ட்ரம்ப் முகாமின் முயற்சிகள் நாட்டை கேலிகூத்தாக்குகிறது" என்று மெரிலாண்ட் ஆளுநர் லர்ரி ஹோகன் சி.என்.என் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு 270 தேர்தல் சபைகளை வெல்ல வேண்டிய நிலையில் ஜனநாயகக் கட்சியின் பைடன் 306 இடங்களை வென்றிருப்பது உறுதியாகியுள்ளதோடு டிரம்பினால் 232 இடங்களையே வெல்ல முடிந்துள்ளது.

தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட ட்ரம்ப் தோல்வியை ஒப்புக்கொள்ளாதபோதும் வெள்ளை மாளிகை செல்வதற்கான செயற்பாடுகளில் பைடன் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். பைடன் தனது அமைச்சரவையை இன்று வெளியிட திட்டமிட்டுள்ளார். அதில் அனுபவம் மிக்க இராஜதந்திரியான 58 வயது அன்டோனி பிளின்கன் இராஜாங்க செயலாளராக நியமிக்கப்படவுள்ளார். அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக ஜோ பைடன் அவர்கள் எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி பதவி ஏற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதற்காக அமெரிக்காவின் பல அரச திணைக்களங்கள் மும்முரமாக பணிகளில் ஈடுபட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# போன் வீடியோவால் வரும் விபரீதங்களை விறுவிறுப்பாகச் சொல்லும் 'அல்டி' திரைப்படம்


பரபரப்பைக் கிளப்பும் வீடியோ உள்ள ஐபோன் ஒன்று குட்டி, குணா மற்றும் ஜானி ஆகியோருக்குக் கிடைக்கிறது. அந்த. வீடியோவால் நடக்கும் களேபரங்களை பரபர, கமர்ஷியல் படமாக சொல்லும் திரைப்படம்தான் "அல்டி". நடிகர் மயில்சாமியின் புதல்வர் அன்பு மயில்சாமி நாயகனாக நடிக்க, கதாநாயகி வேடத்தில் மனிஷாஜித் அறிமுகமாகிறார். சென்றாயன் பிராதன பாத்திரம் ஒன்றில் நடிக்க யாசி, ராபர்ட், மாரிமுத்து, ஏ.வெங்கடேஷ் பசங்க சிவகுமார், சிந்து குமாரி, மிப்பு சாமி, சேதுபதி ஜெயசந்திரன் நெல்லை சிவா டி.எஸ். ஆர். ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். ஆறுமுகம் ஒளிப்பதிவு செய்யும் இப்படத்துக்கு ஸ்ரீகாந்த் தேவா இசையமைக்கிறார். நடனக் காட்சிகளை ராபர்ட் அமைக்க படத்தொகுப்பை வில்ஸி கவனிக்கிறார். கலை இயக்குநராக சிவகுமார் பணியாற்ற, சண்டைக் காட்சிகளை அமைக்கிறார் ஜாக்கி ஜான்சன். டிசைனர் பொறுப்பை ரஜினி கிருஷ்ணன் ஏற்றிருக்கின்றனர். தயாரிப்பு நிர்வாகத்தை ஜெகன் கவனிக்க ஷேக் முகமது மற்றும் ரஹ்மதுல்லா இருவரும் இணைந்து தயாரிக்க "அல்டி" படத்தை எழுதி இயக்குகிறார் எம்.ஜே. உசேன்.

மக்கள் தொடர்பு: பிரியா.





# நிவர் புயல்; பாதிப்புகளை சரி செய்ய, நிவாரணம் வழங்க நடவடிக்கை தேவை : ராமதாஸ்



நிவர் புயல் பாதிப்புகளை சரி செய்ய, நிவாரணம் வழங்க நடவடிக்கை தேவை என, பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.இது தொடர்பாக, ராமதாஸ் இன்று (நவ. 26) வெளியிட்ட அறிக்கை: "தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை அச்சுறுத்திக் கொண்டிருந்த நிவர் புயல் வலு குறைந்து புதுச்சேரி அருகே இன்று அதிகாலை கரையை கடந்துள்ளது. எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கும், அச்சப்பட்ட அளவுக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை என்றாலும் கூட சென்னை மற்றும் புறநகர் பகுதிகளிலும், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும், புதுவையிலும் மக்களுக்கும், விவசாயிகளுக்கும் குறிப்பிடத்தக்க பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

வங்கக்கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவான நாளில் இருந்தே புயலின் வேகம் தொடர்பாகவும், அதனால் ஏற்பட வாய்ப்புள்ள சேதங்கள் குறித்து பல்வேறு வகையான செய்திகள் வெளியாகி வந்தன. அத்தகைய செய்திகள் வெளியான நாளில் இருந்தே தமிழக அரசு போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டது.தமிழக அரசு, சென்னை வானிலை ஆய்வு மையம், தேசிய பேரிடர் மீட்புப் படை உள்ளிட்ட அமைப்புகள் ஒருங்கிணைந்து போதிய முன்னெச்சரிக்கைகளை வெளியிட்டு வந்ததாலும், பாதிப்புகள் ஏற்படக்கூடிய பகுதிகளில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டதாலும் பெரிய அளவில் உயிரிழப்பு உள்ளிட்ட சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்ட, களப்பணிகளில் ஈடுபட்ட அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.அதேநேரத்தில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் ஒரு சில இழப்புகளையும், பாதிப்புகளையும் மட்டும் தான் தடுக்க முடியும் அல்லது குறைக்க முடியும். அந்த வகையில் அரசு சிறப்பாக செயல்பட்டாலும், யாராலும் கட்டுப்படுத்த முடியாத இயற்கை பல இடங்களில் அதன் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.தமிழகத்தின் மற்ற பகுதிகளை விட கடலூர் மாவட்டம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. மாவட்டம் முழுவதும் பல்லாயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெல் உள்ளிட்ட பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

வாழை பயிர்கள் சூறாவளியில் சிக்கி சின்னாபின்னமாகியுள்ளன. விழுப்புரம் மற்றும் காவிரி பாசன மாவட்டங்களிலும் குறிப்பிடத்தக்க அளவில் இத்தகைய பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. பாதிப்புகளை சரி செய்யவும், சரி செய்ய முடியாத பயிர் சேதங்களுக்கு காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாகவும், காப்பீடு செய்யப்படாத பயிர்களுக்கு அரசு உதவிகள் மூலமாகவும் போதிய இழப்பீடுகளை பெற்றுத் தர வேண்டும். கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் குடிசை வீடுகள் சேதமடைந்துள்ளன. அவற்றை சீரமைக்கத் தேவையான உதவிகளை அரசு வழங்க வேண்டும். வாழ்வாதாரம் இழந்த மக்களுக்கு தேவையான பொருளாதார உதவிகளையும் தமிழக அரசு வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறேன். சென்னை மாநகரை நிவர் புயல் நேரடியாகத் தாக்கவில்லை என்றாலும் கூட, கடுமையான மழை மற்றும் பலத்தக் காற்று ஆகியவற்றால் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

சென்னையின் பல்வேறு பகுதிகளிலும், புறநகர் பகுதிகளிலும் பல குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. அந்த பகுதிகளில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்புகளின் தரைத்தளத்தில் வாழும் மக்கள் ஏற்கெனவே பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டாலும் கூட, மற்ற தளங்களில் வாழும் மக்கள் வெள்ளத்தால் சூழப்பட்டு, வெளியில் வர முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளார்.பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு உள்ளிட்ட வசதிகளை வழங்கவும், அனைத்துப் பகுதிகளிலும் தேங்கியுள்ள வெள்ளநீரை வெளியேற்றவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னையில் வேளச்சேரி, புறநகரில் தாம்பரம், முடிச்சூர், ஊரப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் சிறிய அளவில் மழை பெய்தால் கூட வெள்ளம் ஏற்படுவது வாடிக்கையாகி விட்ட நிலையில், அங்கு வெள்ள நீர் வடிகால்களை புதிதாக அமைத்து நீர் தேங்குவதை தடுக்க முடியுமா? என்பது குறித்து வல்லுநர் குழுவை அமைத்துத் தமிழக அரசு ஆராய வேண்டும்.

புதுவையிலும் நிவர் புயல் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. புயல் சேதங்களை கணக்கிட்டு நிவாரணம் வழங்கவும், தேங்கியுள்ள மழை நீரை வெளியேற்றவும் புதுவை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.சென்னை புறநகர் பகுதிகள், கடலூர் மாவட்டம் மற்றும் புதுவையில் புயல் மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கி உதவும்படி பாமகவினரை அறிவுறுத்துகிறேன்.

மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளில் அரசு மீட்புக் குழுவினர் வரும் வரை காத்திருக்காமல், போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மழை நீரை வெளியேற்றும் பணிகளிலும் பாமகவினர் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''.இவ்வாறு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டில் தமிழ் கற்கக்கூடாதா? உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதிகள் சரமாரி கேள்வி

தமிழகத்தில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ்மொழி கற்பிப்பது தொடர்பாக உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

தமிழகத்தில் செயல்பட்டு வரும் மத்திய அரசின் கேந்திரிய வித்யாலயா பள்ளியில் தமிழ்மொழி கற்பிக்கப்படும் என திருத்தம் செய்யக்கோரி உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பொன்குமார் என்பவர் மனு தாக்கல் செய்தார்.

அதில், கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் தமிழகம் முழுவதும் செயல்பட்டு வருகிறது. அதில் 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலக்கூடியமாணவ, மாணவிகளுக்கு தமிழ்மொழி கற்றுக்கொடுப்பதில்லை.

கேந்திரிய வித்யாலய பள்ளிகளில் தமிழ்மொழியை கட்டாய கல்வி மொழியாக ஆக்க வேண்டும். கேந்திரிய பள்ளியில் தமிழ் ஆசிரியர்களை நிரந்தரமாக நியமிக்க உத்தரவேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



இந்த மனு நீதிபதிகள் கிருபாகரன், புகழேந்தி அமர்வு முன் இன்று விசாரணைக்கு வந்தது. விசாரணையின் போது மத்திய அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் மத்திய அரசு ஊழியர்களுக்காக தொடங்கப்பட்டது.

இங்கு படிக்கும் மாணவர்கள் 50 சதவீதம் பேர் வெளிமாநிலத்தை சேர்ந்தவர்கள். விருப்பப்பாடமாக தமிழ் கற்பிக்கப்படுகிறது என வாதிட்டார்.

அப்போது குறுக்கீட்ட நீதிபதிகள், கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் பிரெஞ்சு, ஜெர்மனி, பெங்காலி உள்ளிட்ட மொழிகளை கற்கலாம் ஆனால் தழிழ்நாட்டில் தமிழ்மொழியை கற்கக்கூடாதா? என கேள்வி எழுப்பினர். மேலும், இது போன்ற பதிலை நாங்கள் ஏற்கமாடோம் என்றும் கூறினர்.

பிரதமர் தாய்மொழியை ஊக்கப்படுத்த வேண்டும் என கூறுகிறார், ஆனால் இந்தி, ஆங்கிலத்தை மட்டுமே படிக்க வேண்டும் என கட்டாயப்படுத்துகின்றனர்.

இப்படியே சென்றால் வரும்காலத்தில் தமிழ்மொழி தெரிந்திருந்தால் கேந்திரிய வித்யாலாயா பள்ளிகளில் இடம் கிடைக்காது என்ற நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் விருப்பப்பாடமாக தமிழ் உள்ளது என்பதை ஏற்க முடியாது. தமிழ்மொழியை மட்டும் நாங்கள் கேட்கவில்லை. அனைத்து மாநில மொழிகளுக்கும் சேர்த்து தான் கேட்கிறோம் என கருத்து தெரிவித்த நீதிபதிகள் விரிவான உத்தரவிற்காக வழக்கு விசாரணையை நாளை ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

## திருப்பூர் தையல் தொழிலாளி எழுதிய நாவலுக்கு அமெரிக்க தமிழ்ப் பல்கலைக்கழகம் அங்கீகாரம்




திருப்பூரை சேர்ந்த தையல் தொழிலாளி எழுதிய நாவலுக்கு அமெரிக்க உலகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் விருது வழங்கி கவுரவித்துள்ளது. திருப்பூர் கோவில்வழியை சேர்ந்தவர் ஆ.சிவராஜ் (50) தையல் தொழிலாளி. இவரது மனைவி தேவி. சிறுவயது முதலே கதை எழுதும் பழக்கமுடையவர் சிவராஜ். இவர் எழுதிய 'சின்னானும் ஒரு குருக்கள்தான்' நாவலுக்கு, தற்போது அமெரிக்க உலகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் விருது வழங்கி கவுரவித்துள்ளது.

இதுதொடர்பாக எழுத்தாளர் சிவராஜ் 'இந்து தமிழ்' செய்தியாளரிடம் கூறியதாவது: சிறு வயது முதலே வாசிப்பும், எழுத்தும் என் வாழ்வோடு கலந்துவிட்டது. பழநியாண்டவர் தொழில்நுட்பக் கல்லூரியில் பட்டயப்படிப்பு முடித்துள்ளேன். திண்டுக்கல் மாவட்டம்பழநி கள்ளிமந்தயம் அருகே உள்ளகுப்பாயவலசு சொந்த ஊர். திருமணமாகி, பிழைப்புக்காக திருப்பூர் வந்தேன். 'சின்னானும் ஒரு குருக்கள் தான்' என்ற தலைப்பில் நான்எழுதிய நாவலில், ஒரு கிராமத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை கதைமாந்தர்களாக்கினேன்.

அருந்ததியர் சமூகத்தை சேர்ந்தஇளைஞர், கோயில் அர்ச்சகராவதும், அதனைத் தொடர்ந்து ஊரில் ஏற்படும் விஷயங்களையும் கதையாக்கினேன். சொந்த கிராமத்தில் தங்கி 3 ஆண்டுகள் நாவல் எழுதினேன்.நாவல் முழுமையாக எழுதிய பிறகே, திருப்பூர் திரும்பினேன்.அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்பதை அரசு சட்டமாக இயற்றி உள்ளது.

ஆனால் கிராமங்களில் கள யதார்த்த நிலை வேறு மாதிரியாக உள்ளது. சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வை இந்த நாவலில் பதிவு செய்துள்ளேன். வாஷிங்டன் மேரிலேண்டில் உள்ள அமெரிக்க உலகத் தமிழ் பல்கலைக்கழகம் சிறந்த நாவலாக தேர்ந்தெடுத்து, கடந்த வாரம் மதுரையில் நடைபெற்ற விழாவில் என்னை கவுரவித்தது.

பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வின்குமார், மணிமேகலை பிரசுரத்தின் நிர்வாக இயக்குநர் ரவி தமிழ்வாணன் ஆகியோர் விருதும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கினர். தற்போது தமிழகத்தில் 8 பேர், எம்.ஃபில் (ஆய்வியல் நிறைஞர்) பட்டத்துக்காக என் நாவலை ஆய்வு செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# இலங்கையில் அதிகரிக்கும் கைதிகளின் மரணங்கள்: அச்சத்தில் மக்கள்

**சிவா பரமேஸ்வரன் - மூத்த செய்தியாளர்**

இலங்கையில் மனித உரிமைகள் ஆணையம் எனும் அமைப்பு இன்னும் ஓரளவுக்கு செயற்பாட்டிலுள்ளது என்பதே ஆறுதலளிக்கும் விஷயம். அதிலும் தைரியமாக ஒரு அறிக்கையை வெளியிடுவது வரவேற்கப்பட வேண்டியதே.

பல சுயாதீன ஆணைக் குழுக்களை உறுதிப்படுத்தவும், அவற்றின் செயற்பாட்டில் அரசின் தலையீடு இல்லாமல் செய்யவும் சில காத்திரமான அம்சங்களை அரசியல் யாப்பின் 20ஆவது திருத்தம் கொண்டிருந்தது.

ஆனால் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலை அடுத்து நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலிலும் ராஜபக்ஷ்களின் கையோங்கியதை அடுத்து முதல் முன்னெடுப்பாக 20ஆவது திருத்தத்துக்கு சாவுமணி அடிக்கப்பட்டது.

நீதிமன்றம் தலையிட்டு சில விஷயங்களில் சிறிய ஆறுதல்களை அளித்தாலும், 20 நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதே உண்மை. அந்த நல்லடக்கம் கௌரவமாக நடைபெற்றது எனும் ஆறுதலை அளித்ததே நீதிமன்ற தீர்ப்பு.

மனித உரிமைகள் ஆணைக் குழு, தேர்தல் ஆணிக் குழு, அரச செலவினங்கள் தணிக்கைக் குழு, அரசியல் யாப்புப் பேரவை போன்ற அமைப்புகள் இலங்கைக்கு மிகவும் தேவையான 20ஆவது சட்டத் திருத்தம் மூலமே முன்னெடுக்கப்பட்டது. ஆனால் நாடாளுமன்றத்தில் மூன்றுக்கு இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமாக இடங்களைக் கொண்டுள்ள ராஜபக்ஷ்களின் ஆட்சியில் அவர்கள் நினைப்பது எதுவும் சாத்தியமே.

இதில் விசாரணைக்கென்று காவல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படுபவர்களின் நிலையும் அடங்கும். குற்றச்சாட்டுகள் ஏதும் பதியப்படாமல் நீண்ட நாட்களாக சிறையில் அடைத்து வைப்பது, விடுதலை என்கிற வார்த்தையே அகராதியில் இல்லை என்பது போல் நடந்து கொள்வது போன்றவையே நடைமுறை எனும் நிலையில் பொலிஸ் காவலில் மரணங்கள் அதிகரிப்பது மக்களை மேலும் கலக்கமடையச் செய்துள்ளது.




### உயிருக்கு உத்தரவாதமில்லை

இந்நிலையில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்கள் உயிரிழக்கும் எண்ணிக்கை அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு கவலை வெளியிட்டுள்ளது.

அந்த ஆணையம் அப்படியான ஒரு அறிக்கையை தைரியமாக வெளியிட்டுள்ளதே பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இலங்கையில் சிறையிலிருப்போரின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவொன்று சமீபத்தில் தெரிவித்திருந்த குற்றச்சாட்டுகளை அடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணையம் தனது கவலையை வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டின் ஜூன் முதல் அக்டோபர் வரையிலான காலப் பகுதியில் மட்டும் பொலிஸ் காவலிலிருந்த எட்டு கைதிகள் மரணமடைந்துள்ளது தொடர்பில் தகவல்கள் பதிவாகியுள்ளன என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இனப்பாகுபாடின்றி இந்த மரணங்கள் நிகழ்ந்துள்ளன. உதாரணமாகக் கடந்த அக்டோபர் மாதம் 20ஆம் திகதி தடுப்புக் காவலிலிருந்தபோது மாகந்துரே மதுஷ் என்றழைக்கப்படும் சமரசிங்க ஆராச்சிலாகே மதுஷ் லக்சிதவின் மரணமும் இதிலடங்கும் என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.


அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை அல்லது அதற்கு இணையான மீறல்கள் குறித்து விசாரணை செய்வதற்கு, நீதிமன்ற உத்தரவின் பேரில் அல்லது வேறு உத்தரவிற்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரின் நலன்கள் தொடர்பில் பரிந்துரைகளை வழங்குவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்குமென என்று அதன் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பதில் பொலிஸ் மாஅதிபர் சி.டி விக்ரமரத்னவிற்கு, ஆணைக்குழுவின் ஆணையாளர் ரமணி முத்தெட்டுவகம அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இதைத் தெரிவித்துள்ளார்.

மதுஷீக்கு உயிராபத்து ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து அதிகாரிகளுக்கு முன்கூட்டியே தெரிவித்த போதிலும், பொலிசார் இது தொடர்பில் எவ்விதமான பாதுகாப்புகளையும் மேற்கொள்ளவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை வெளியிட்டுள்ளது.

“கடந்த அக்டோபர் மாதம் 18ஆம் திகதி, கொழும்பு குற்றப் பிரிவுக்கு மாற்றப்பட்ட மாகந்துரே மதுஷின் உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது. அதையடுத்து மதுஷின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு, கடந்த அக்டோபர் 19ஆம் திகதி கொழும்பு குற்றப் பிரிவு மற்றும் பொலிஸ் ஆணைக்குழுவிற்கு, தொலைநகல் மூலம் மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவுறுத்தியபோதிலும் மாகந்துரே மதுஷ் கொலை செய்யப்பட்டதைத் தாங்கள் கவனத்தில் எடுத்துள்ளோம்” என்று அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளதுது”.

மனித உரிமைகள் ஆணைக்குழு, பதில் பொலிஸ் மாஅதிபருக்கு கடந்த அக்டோபர் மாதம் அனுப்பிவைத்த கடிதத்தில், பொலிஸ் காவலில் இருந்தவர்கள் உயிரிழந்தமைக் குறித்து தாங்கள் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.




### விசாரணைக்கு அழைத்தும் வராத பொலிசார்

கொழும்பு குற்றப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் பொறுப்பதிகாரி ஆகியோரை, அக்டோபர் 21ஆம் திகதி காலை 11.30 மணிக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதிலும், அவர்கள் எந்த காரணமும் தெரிவிக்காமல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னால் ஆஜராகவில்லை என்று அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விஷயம் தமது ஆணைக்குழுவின் சட்ட வரம்புக்குள் (பிரிவு 21) வருகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமைகள் ஆணையாளர், குறித்த அதிகாரிகளுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கடிதம் மூலம் அறிவிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்வது நாட்டில் சட்டத்தின் ஆட்சிக்கு கடுமையான சிக்கலை உருவாக்கும் என, மனித உரிமைகள் ஆணைக்குழு நம்புவதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ் காவலில் இருக்கும் கைதிகளின் மரணம் தெற்காசியாவின் அதிகமாகவுள்ளது என்பது கசப்பான உண்மை. ஆனால் அந்த எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் கூடுதலாகவுள்ளது கவலையையும் கலக்கத்தையும் ஏற்படுத்துகிறது.

### மரணத்துக்கு கற்பிக்கப்படும் காரணங்கள்

விசாரணைக்காக பொலிசாரால் காவல் நிலையத்துக்கு அழைத்துவரப்படுவோரும் விசாரணைக் காலத்தில் தடுத்து வைக்கப்படும் கைதிகளும் உயிரிழப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அதற்கான நியாயங்களைத் தேடுவது போலுள்ளது இலங்கை காவல்துறையில் கருத்துக்கள்.

உதாரணமாக போகம்பரை பழைய சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் 5 சிறைக் கைதிகள் கடந்த நவம்பர் மாதம் 18ஆம் திகதி அதிகாலையில் சிறைச்சாலை மதில் மீது ஏறி தப்பிச்செல்ல முயற்சி செய்த போது ஒருவர் உயிரிழந்துள்ளதாக, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உப்புல்தெனிய, ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

ஆனால் அன்றைய தினம் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இதில் எது உண்மையென்பது காவல்துறையினருக்கே வெளிச்சம்.



அந்த துப்பாக்கிச் சூட்டின் போது உயிரிழந்தவர் அனுராதபுரத்தை சேர்ந்த 30 வயதான நபர் எனச் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிறைகளிலுள்ள கைதிகளின் பாதுகாப்பு அங்குள்ள அதிகாரிகளின் கைகளிலேயே தங்கியுள்ளது எனும் நிலையில், அந்த அதிகாரிகளே அவர்களின் மரணத்திற்கு காரணமாகும் சம்பவங்கள் பாரதூரமான விஷயம் என்று சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு கூறுகிறது.

இது வேலியே பயிரை மேய்வது போன்ற கதையாகும். கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியவர்களே ஏதோ காரணம் காட்டி அவர்களைக் கொலை செய்வதோ அல்லது உயிரிழக்க வைப்பதோ சர்வ சாதாரணமாகி வருவதாக மனித உரிமை ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்படியான கொலைகள் உடனடியாக விரைவு அடிப்படையில் விசாரிக்கப்பட்டு நியாயம் வழங்ககப்பட்டால் மட்டுமே இனி இதுபோன்ற உயிரிழப்புகளைத் தடுக்க முடியும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

கடந்த நவம்பர் மாதம் 3ஆம் திகதியன்றும் மொனராகலைச் சிறைச்சாலையில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கைதி அதிகாரிகள் தாக்கியதால் மரணமடைந்தார் என்று கைதிகளின் உரிமைகள் பாதுகாக்கும் அமைப்பின் தலைவரும், சட்டத்தரணியுமான சேனக பெரேரா கூறுகிறார்.

உறுதி செய்யப்படாத ஒரு சம்பவத்தின் அடிப்படையில் இரு அதிகாரிகள் இணைந்து இந்த கைதி உயிரிழப்பதற்கு காரணமாக இருந்துள்ளனர் என்கிறார் பெரேரா.

இந்தக் கொலையை அடுத்துச் சிறப்பு விசாரணையொன்றை முன்னெடுப்பதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உபுல்தெனிய அன்றைய தினமே அறிவித்தார். ஆனால் ஆறு வாரங்கள் கடந்த பின்னரும் இது தொடர்பில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளதாக அறிய முடியவில்லை.




தொற்றுக்கள் பரவிவரும் இக்கால கட்டத்தில் நாட்டின் சில சிறைச்சாலைகளில் இவ்வாறான மரணங்கள் நடைபெறுவது கவலையளிப்பது மட்டுமின்றி அச்சத்தையும் ஏற்படுத்துவதாகவும், அதிகாரிகளின் மெத்தனப் போக்கு ஏற்புடையதல்ல எனவும் கூறுகிறார் சேனக பெரேரா.

விசாரணை மற்றும் நடவடிக்கைகள் இல்லாத சூழலில் அதிகாரிகள் இப்படியான குற்றங்களை மேலும் புரிவதற்கான தூண்டுதலையும் தைரியத்தையும் அளிக்கும் என்று சட்டத்தரணி சேனக பெரேரா தெரிவித்துள்ளார்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் எல்லோரும் குற்றவாளிகள் எனும் எண்ணம் ஜனாதிபதி தொடங்கி சிறைச்சாலை அதிகாரி வரை பரவியுள்ளது என்றும், நீதிமன்றம் உரிய விசாரணைக்குப் பிறகு அளிக்கும் தீர்ப்பின்படியே ஒருவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட வேண்டும் என்று சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு கூறுகிறது.

அநேகமாக எல்லாச் சிறைச்சாலையில் கைதிகள் சித்திரவதை செய்யப்படுவது வழக்கமாகியுள்ளது, அது குறித்து அதிகாரிகள் அச்சப்படுவதில்லை என்றும் அந்த அமைப்பு மேலும் கூறுகிறது.

### மஹர மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலைகள்

இந்த ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி மஹர சிறையிலிருந்த காவிந்த இசுறுவின் தந்தை தனது மகன் சட்ட விரோதமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று மனித உரிமைகள் ஆணையத்திடம் புகார் அளித்துள்ளார். ஆனால் சிறை அதிகாரிகளோ அவர் சிறையிலிருந்து தப்பிக்க முயன்ற போது தவிறி விழுந்து மரணமடைந்ததாகக் கூறுகின்றனர்.

ஆனால் காவிந்து இசுறு சிறை அதிகாரிகளால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணையத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. தனது மகனின் மரணம் ஒரு தாக்குதலால் நிகழ்ந்ததாகவும், அவரது கால்கள் மற்றும் கைகள் உடைக்கப்பட்டிருந்ததாகவும் அவரது தாய் ஆர்.எம்.கருணாவதி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தெரிவித்திருந்தார்.

கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் நோக்கில், அனுராதபுரம் சிறைச்சாலையில் கைதிகள் நடத்திய போராட்டத்தின் மீது சிறை அதிகாரிகள் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டதில், கைதி ஒருவர் உயிரிழந்தமைத் தொடர்பில் கடந்த ஆகஸ்ட் மாதம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.




தனது கணவனைக் கொலை செய்யும் நோக்கத்துடன் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகச் சிறை அதிகாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட அந்த நபரின் மனைவி ஆகஸ்ட் 21 அன்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அனுராதபுரம் சிறையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரண்டு கைதிகள் கொல்லப்பட்டுள்ளனர். இப்படியான தொடர் மரணங்கள் பல கேள்விகளை எழுப்பினாலும் விடை என்னவோ மௌனமாகவே உள்ளது. நாட்டில் தற்போது 20ஆம் சட்டத்திருத்தம் இல்லாத நிலையில், அடுத்து என்ன எனும் கவலைகள் மேலோங்கவே செய்கின்றன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் விசாரணைக் கைதிகளின் மரணம் ஆகியவை குறித்து இலங்கை அரசின் சிறைச்சாலைத் திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சரைத் தொடர்பு கொண்டு கருத்துக்களைப் பெற எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

# தமிழர்களுக்கு தலைமை தாங்க 'தகுதி' வாய்ந்தவர்களுக்கு, தாயகத்தில் தட்டுப்பாடா? பொதுவெளியிலிருந்து சிலரை தேர்ந்தெடுக்க இயலாதா?

- யாழ்ப்பாணத்திலிருந்து விசாகன் எழுதுகின்றார்

*(தொடர்ச்சி...)*

தமிழர் விடுதலைக் கூட்டணியான வட்டுக்கோட்டைத் தீர்மானம் மூலம், தமிழர்களின் பிரச்சனைகளுக்கு தனிநாடு ஒன்றே தீர்வாகும் என்ற முடிவெடுத்த பின்னர், அதை அடுத்து வந்த தேர்தல்களிலும் கொள்கைப் பிரகடனத்தில் முக்கிய விடயமாக எடுத்துக்கொண்டார்கள். அப்போது நடத்தப்பெற்ற தேர்தல் பிரச்சாரங்களில் தனிநாட்டுக் கோரிக்கையே முக்கிய பேசுபொருளாக இருந்தது. தேர்தல் கூட்டங்களில் "நட்சத்திரப் பேச்சாளர்களாக" நாம் முன்னே குறிப்பிட்ட வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா, வரதராஜப் பெருமாள் ஆகியோர் உட்பட பல இளைஞர்கள் திகழ்ந்தார்கள். வடக்கிலும் கிழக்கிலும் இவர்கள் இல்லாத அரசியல் பிரச்சாரக் கூட்டங்களோ இல்லை என்று சொல்லும் அளவிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது இவர்களுக்கு.

ஒரு கூட்டத்தில் பேசிவிட்டு வண்ணை ஆனந்தனை அடுத்த கூட்டத்திற்கு அழைத்துச் செல்வதற்கு வாகனம் ஒன்று தயாராக இருக்கும். மாவை சேனாதிராவிற்கும் இதே நிலைதான். ஒரே நாளில் மூன்று கூட்டங்களில் பீரங்கிப் பிரச்சாரம் செய்யும் "கதாநாயகர்கள்" போன்று இந்தப் பேச்சாளர்கள் அழைக்கப்பட்டார்கள்.









அப்போதைய தேர்தல் நாட்களில் கவிஞர் காசி ஆனந்தனால் எழுதப்பட்ட கவிதை வரிகள் தான் "ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை" என்பது. அதை கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களே தனது உதடுகளால் மேடைகளில் உரத்துப் பேசியதை கேட்டதாக எனது மூத்தவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இந்த வரிகள் தமிழர் விடுதலைக் கட்டணியின் தேர்தல் பிரச்சாரத்திற்காக அப்போது எழுதப்பட்டதாகும். தேர்தல்கள் முடிந்து தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றி பெற்று பல ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்டாலும் ஆட்சியை தட்டிக் கொள்ளும் அரசாங்கம் தமிழ் எம்பிக்கள் பாராளுமன்றத்தில் கேட்கின்ற விடங்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதில்லை. பெரும்பான்மையினருக்கு ஆதரவான சட்டங்கள் பல பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அது நிறைவேற்றப்பட்டு பின்னர் அமுல் செய்யும் அளவிற்கு அரசியல் பயணித்துக் கொண்டிருந்தது. படித்த தமிழ் இளைஞர்கள் பல்கலைக் கழகம் செல்வதிலும், அரச உத்தியோகம் பெற்றுக் கொள்வதிலும் "தரப்படுத்தல்" என்னும் விகிதாசார முறை கடைப்பிடிக்கப்பட்டதனால் அவர்கள் பாதிக்கப்பட்டார்கள். தமிழ்ப் பெற்றோர்கள் களங்கி நின்றார்கள்.

இவ்வாறான கட்டங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் அணியினர் போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கினார்கள். அரசாங்க அமைச்சர்கள் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு உத்தியோகபூர்வமான பயணங்களை மேற்கொண்டு வரும்போது, கறுப்புக் கொடி பிடித்தல், கோசங்களை எழுப்பி ஆர்பாட்டம் செய்வது போன்ற அரச எதிர்ப்பு போராட்டங்களை நடத்தினார்கள். இதனால் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்படுவதும் பின்னர் சட்டத்தரணிகளான எமது பாராளுமன்ற உறுப்பினர்கள், அவர்களுக்காக வாதாடி விடுவிப்பதும் பின்னர் மீண்டும் சிறை செல்வதுமாக இருந்தார்கள்.

இவ்வாறாக அடிக்கடி சிறைசென்று வந்த மாவை சேனாதிராஜா வண்ணை ஆனந்தன் ஆகியோரில் வண்ணை ஆனந்தன் வெளிநாடு ஒன்றுக்கு பயணமாகிவிட, மாவை சேனாதிராஜா தொடர்ச்சியாக தமிழ் மண்ணில் தங்கியிருந்து தொடர்ச்சியாக அரசியலில் பங்கெடுத்து வந்தார். இவ்வாறான போராட்டகளுக்கிடையில் எண்பதுகளின் ஆரம்பத்தில் தோற்றம் பெற்ற ஆயுதம் தாங்கிய போராட்டங்களின் விளைவால் அவற்றில் முழுமையான பங்களிப்பு இல்லாத வகையிலும் மாவை சேனாதிராஜா அவர்கள் கைது செய்யப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. இதன் காரணமாக அவரது தலைவர்களின் ஆலோசனைப்படி மாவை சேனாதிராஜா இந்தியாவிற்குச் சென்று தஞ்சமடைந்து கொள்ள காசி ஆனந்தன் போன்றவர்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கத்தோடு தொடர்புகளை வைத்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். வரதராஜப் பெருமாளோ, இந்தியச் சகதிக்குள் அகப்பட்டுக் கொண்டு இன்னும் அதே சகதிக்குள் இருந்த வண்ணம் சாதம் சாப்பிட்டுக்கொண்டிருக்கின்றார்.

தொடர்ந்து அமிர்தலிங்கம் அவர்களின் படுகொலைக்குப் பின்னர் வெற்றிடமாக வந்த எம்பிப் பதவி மாவைக்கு கிட்டியது. அன்று தொடங்கிய அவரது அதிஸ்ட அரசியல் பயணம் இன்றும் தொடர்கின்றது, அவருக்கே சாதகமாக.

காசி ஆனந்தன் தமிழ்நாட்டிலேயே தங்கிவிட்டார். போராட்ட காலத்தின் இடையில், வன்னியில் தலைவர் பிரபாகரன் அவர்களின் அருகிலேயே இருந்து இராணுவச் சீருடையுடன் போர்க்கால இலக்கியங்களைப் படைத்தவர் தமிழ்நாட்டுக்கு ஒரு தடவை தலைவராலேயே அனுப்பப்பட்டார். ஆனால் அங்கேயே அவர் தங்கிவிட, சில ஆண்டுகளுக்குப் பின்னர், தலைவர் பிரபாகரன் அவர்கள் அவரை மீண்டும் வன்னிக்கு வரும்படி அழைப்பு விடுக்க அவர் திரும்பிச் செல்லவே இல்லை. "எனது பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றத்திற்காக நான் இங்கு தங்கியிருக்கவே விரும்புகின்றேன். மன்னியுங்கள்" என்ற செய்தியை வன்னிக்கு அனுப்பிவிட்டு குடும்பத்தோடு அங்கு இருந்து தற்போது அவரது புதல்வி ஒருவரும் மாவை சேனாதிராஜாவின் புதல்வி ஒருவரும் தமிழ்நாட்டில் வைத்தியர்களாக பணியாற்றுகின்றார்கள் என்கின்ற விபரங்கள் பலருக்குத் தெரியாது.

சரி, இந்த விடயங்கள் ஒருபக்கம் இருக்க, சில நாட்களுக்கு முன்னர் மாவை சேனாதிராஜா அவர்கள் பற்றி இங்கு யாழ்ப்பாணத்தில் வெளியான ஒரு செய்தியை நான் வாசிக்க நேர்ந்த விடயத்தையும் இப்போது பகிர்ந்து கொள்கின்றேன்.

இந்தச் செய்தியை நான் வாசித்து முடிக்கவும் அவரைப் பற்றி யாழ்ப்பாணத்தில் கட்சி மட்டத்தில் பேசப்பட்ட விடயம் ஒன்று எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. ஒரு தடவை யாழ்ப்பாணம் நகரத்தில் அமைந்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டம் நிறைவுற்ற பின்னர் தன்னோடு அமர்ந்து பேசிக்கொண்டிருந்த இரண்டு அங்கத்தவர்களிடம் "மாவை" கூறினாராம் "தம்பியவை, நான் எம்பியாக பல ஆண்டுகள் இருந்திட்டன். இனி ஒரு தடவை என்றாலும் வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்திட்டுப் போக விரும்புறன்" என்று.

அன்றைய நாட்களில்தான் முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஐயா, தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு ஏற்பட்ட உள்ளக முரண்பாடுகள் காரணமாக விலகியிருந்தார். எனவே அந்த முதலமைச்சர் பதவியை பெற்றுக்கொள்ள அவருக்கு "ஆசை" வந்ததிற்கு காரணம் இருக்கின்றது. ஆனால் தற்போது வெளியான அந்தச் செய்தியைப் படித்ததும் நான் எனக்குள் கேட்டுக்கொண்ட கேள்வி "இந்தாளுக்கு ஒரே நேரத்தில எத்தனை ஆசை மனதில உதிக்குது" என்று. தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியையும் தன்னோடு "பிடித்து" வைத்திருக்கும் இவருக்கு இன்னொரு தலைவர் பதவியாசையா? அந்தச் செய்தி பின்வருமாறு இருந்தது: தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுசெயலாளர் மாவை சேனாதிராஜா தலைமையில் தமிழர் தேசிய சபை என்ற பெயரில் புதிய அமைப்பை உருவாக்க முயற்சிகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை அடைந்துக் கொள்வதற்காக இத்தகைய புதிய அமைப்பை உருவாக்க முயற்சிகள் இடம்பெற்று வருவதாக கூறப்படுகின்றது. குறித்த அமைப்பில், ஐக்கிய நாடுகளின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் நவனீதம்பிள்ளை மற்றும் சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளர் யாஸ்மின்சூக்கா ஆகியோரையும் உள்ளடக்க இருப்பதாக தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்நிலையில் மாவை சேனாதிராஜா தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில், குறித்த விடயம் தொடர்பாக தற்போதைய நிலைமையில் எந்த விளக்கத்தையும் வழங்க முடியாது என்று கூறியுள்ளார். இது தான் அந்த பத்திரிகைச் செய்தி.

இறுதியாக சில விடயங்களை இங்கு பதிவு செய்துவிட்டு கட்டுரையை நிறைவு செய்யலாம் என்று நினைக்கின்றேன். கடந்த காலங்களில், தமிழ் மக்கள் இழந்தவை பல. உயிர்கள், உடமைகள், உறவுகள் என்று இலட்சக் கணக்கானவை. அவற்றை மீளவும் பெற்றுக்கொள்வது என்பது அரிதிலும் அரிது. ஐம்பதாயிரத்திற்கும் அதிகமாக போராளிகள், இலட்சக் கணக்கான பொதுமக்கள். அங்கங்களை இழந்த யுவதிகள், மற்றும் இளைஞர்கள், கணவர்மார்களை இழந்த இளம் விதவைத் தாய்மார்கள். காணாமற்போனவர்களை தேடிய வண்ணம் ஆண்டுகள் பலவாய் வீதிகளில் நின்று தவிக்கும் ஆண் பெண் உறவுகள்.

இவ்வறையெல்லாம் நன்கு தெரிந்து கொண்டும், பாராளுமன்றப் பதவிகைள பொய்யான வாக்குறுதிகளைச் சொல்லி பெற்றுக்கொண்டு, ஆண்டுகள் பல மைத்திரி - ரணில் ஆட்சியில் மௌனமாக இருந்து அனுபவித்த "சொர்க்கங்கள்" உல்லாசங்கள். இவையெல்லாம் மக்கள் அறியாதவை என்று எண்ணிக்கொண்டு தன்னுடைய ஆசைகளை மட்டும் ஒவ்வொன்றாய் பெற்றுவிடத் தவிக்கும் மாவை சேனாதிராஜா போன்றவர்ளை மீண்டும் மீண்டும் நம்பி ஏமாந்து விடாமல், எமது ஈழத் தமிழர்களின் ஆழக் கடலில் முத்துகள் எடுப்பது போன்று, பொதுவெளியில் அறிவும் ஆற்றலும் கொண்டவர்களாக விளங்கும் புதியவர்களை தமிழ் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். பின்னர் தம்மை அரசியல் பாதையில் வழிநடத்தக் கூடிய பதவிகளில் அவர்களை அமர்த்த வேண்டும் என்பதே இப்போது எமக்குள்ள மிகவும் அவசியமான பொறுப்புகள் ஆகும்.



# இலங்கையில் யுத்தத்தில் உயிரிழந்த எமது போராளிகளை நினைவுக்கூரும் மாவீரர் நாள் இன்று

**ஜெகதீஸ்வரன் பிரசாந்த்**

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தில் உயிரிழந்த போராளிகளை நினைவுக்கூரும் மாவீரர் நாள் இன்று (வெள்ளிக்கிழமை) வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் அனைவரினாலும் நினைவு கூறப்படுகின்றது.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக போராடி உயிர் நீத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாவது போராளியாக கருதப்படும் சங்கர் என்ற செ.சத்தியநாதன், உயிரிழந்த நாளை மையப்படுத்தி, 1989ம் ஆண்டு முதல் மாவீரர் நாள் வடக்கு, கிழக்கு மக்களினால் அனு்'டிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் இவ்வருடம் கொரோனா அச்சுறுத்தல் உள்ளிட்ட காரணங்களினால் மாவீரர் நாளை பொதுவெளியில் மக்கள் ஒன்றுத்திரண்டு அனு்'டிப்பதற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்கள் தடைவிதித்துள்ளன.

அந்தவகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மன்னார் உள்ளிட்ட மாவட்டங்களின் பல்வேறு நீதிமன்றங்களில் இதுதொடர்பான வழக்குகளில் சட்டமா அதிபர் திணைக்களம் நேரடியாக முன்னிலையாகி தடை உத்தரவுகளைப் பெற்றுள்ளது.

மேலும் குறித்த தடை உத்தரவுக்கு எதிராக மாவீரர்களின் உறவினர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்களும் நீதிமன்றங்களால் தள்ளுபடி செய்யப்பட்டன.

ஆகவே, இம்முறை மாவீரரை நாளை வீடுகளில் இருந்தே அனு்'டிக்குமாறு தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக அறிவிப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாவீரர் நாள் இன்று! - வடக்கு கிழக்கில் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரிப்பு





இன்று வெள்ளிக்கிழமை, இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதி எங்கும் இன்று மாவீரர் நாள் நினைவேந்தல் நடைபெறவுள்ள நிலையில், இராணுவ, பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் 6 பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளால் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய, 46 பேருக்கு தடை உத்தரவுகள் வழங்கப்பட்டு, மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை பொதுவெளியில் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் பிரசன்னம் என்றுமில்லாத அளவில் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால், மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை செய்ய முற்படுகின்ற மாவீரர் துயிலும் இல்ல வளாகங்கள் மற்றும் வழமையான நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறுகின்ற இடங்களில் ஆயுதம் தாங்கிய பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.


முல்லைத்தீவு நகர்ப் பகுதி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் ஏற்கனவே இருந்த இராணுவ சோதனைச் சாவடிகளை விட விசேடமாக பொலிஸ் சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இராணுவத்தினர், மோட்டார் சைக்கிள் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பொதுமக்கள் அச்சத்துடன் நடமாடிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் இராணுவ, பொலிஸ் பாதுகாப்பும், கெடுபிடிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# புட்டு அரசியல்

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



யுத்த காலங்களில் பிட்டும் வடையும் ரொட்டியும் தோசையும் சாப்பிட்ட தமிழ் மக்கள் இப்பொழுது பீட்சா சாப்பிடும் ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்ற தொனிப்பட யாழ் மாவட்ட த லை மை ய க பொலிஸ் பொறுப்பதிகாரியான பிரசாத் பெர்னாண்டோ யாழ் மேல் நீதிமன்றத்தில் கருத்துக் கூறியுள்ளார். மாவீரர் நாள் தொடர்பான ஒரு வழக்கில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அவ்வாறு கூறியது தவறு என்று சுமந்திரன் ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து நீதிமன்றம் வழக்கோடு சம்பந்தப்பட்ட விடயங்களை மட்டும் நீதிமன்றத்தில் கதைக்குமாறு பிரசாத் பெர்னாண்டோவிடம் அறிவுறுத்தி இருக்கிறது.

அதன்பின் கடந்த புதன்கிழமை நடந்த நீதிமன்ற அமர்வின் போது கொழும்பிலிருந்து வந்த சிரேஷ்ட பிர-தி வாதாடி மன்றாடியார் முன்னைய அமர்வில் பிரசாத் பெர்னாண்டோ தெரிவித்த கருத்துக்கு மன்னிப்புத் தெரிவித்துள்ளார். அதைத் தொடர்ந்து அங்கிருந்த பிரசாத் பெர்னாண்டோவும் மன்னிப்புக் கோரியுள்ளார்.

தமிழ் மக்களின் உணவுப் பழக்க வழக்கம் குறித்து ஒரு பொலிஸ் அதிகாரி தெரிவித்த கருத்துக்கள் சமூக வலைதளங்களிலும் ஊடகங்களிலும் பலமான எதிர்வினையை கிளப்பியுள்ளன. ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான அங்கஜன் குறிப்பிட்ட போலீஸ் அதிகாரியை கண்டிக்கும் அளவுக்கு நிலைமை வளர்ந்திருக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் கூட பிட்டும் வடையும் விடயத்தில் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். மொத்தத்தில் இது தமிழ் மக்களை இயக்க வேறுபாடுகளுக்கு அப்பால் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றுபடுத்தியிருக்கிறது.அதே சமயம் அது முகநூல் உலாவிகளின் கவனத்தை மாவீரர் நாளிலிருந்து திசைதிருப்பி புட்டின் மீது குவித்துள்ளதா?

ஒரு மக்கள் கூட்டத்தின் உணவை இழிவு படுத்திக் கூறுவது என்பது அந்த மக்கள் கூட்டத்தின் மர-புரிமைச் சொத்துக்களுக்கு எதிரான அரசியலின் ஒரு பகுதிதான் என்பதனை எனது நண்பரான ஒரு புலமையா-ளர் சுட்டிக் காட்டினார். ஏற்கனவே அரசாங்கம் தமிழ் மர-புரிமைச் சொத்துக்களுக்கு எதிராக ஒரு யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. மரபுரிமைச் சொத்துக்களில் இருக்கக்கூடிய பல்வகைமையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. மா-றாக தமிழ் முஸ்லிம் கிறிஸ்தவ மரபுரிமைச் சொத்துக்களுக்கு எதிராக சிங்கள பௌத்த மரபுரிமை சொத்துக்களை முன்நிறுத்தும் ஒரு போக்கை அரசாங்கம் முன்னெடுக்கின்றது. சிங்கள பௌத்த மயமாக்கலின் ஒரு பகுதியாக இந்த மர-புரிமை யுத்தம் முன்னெடுக்கப்படுகிறது.

கிழக்கில் தமிழர்களோ முஸ்லிம்களோ இல்லாத ஒரு தொல்லியல் செயலணியை அரசாங்கம் உருவாக்கியிருக்கிறது. ஒரு தமிழ் மருத்துவர் அதில் இணைய முன்வந்த போதிலும் அவரை உள்ளெடுக்க அரசாங்கம் தயாரில்லை. இப்படிப்பட்ட ஓர் அரசாங்கத்தின் உபகரணமாகிய ஒரு போலீஸ் அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தமை தமிழ் மக்களை இன ரீதியாக் உணவு ரீதியாக் பண்பாட்டு ரீதியாக ஒன்றிணைத்திருக்கிறது.

போரை முடிவுக்கு கொண்டு வந்ததன் மூலம் அரசாங்கம் போர்க்காலத்தில் பிட்டு வடை ரொட்டி தோசை ஆகியவற்றை மட்டும் சாப்பிடக் கூடியதாக இருந்த தமிழ் மக்களுக்கு பீட்சா சாப்பிடும் ஒரு நிலைமையை பெற்றுக் கொடுத்திருக்கிறது என்ற தொனிப்பட அப்பொலிஸ் அதிகா-ரி நீதிமன்றத்தில் கூறினார். இதன் மூலம் அவர் பின்வரும் விடயங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உணர்த்த முற்படுகின்றாரா?

முதலாவது அரசாங்கம் போரை முடிவுக்கு கொண்டு வந்ததன் மூலம் தமிழ் மக்களுக்கு ஐரோப்பிய பாணியிலா-ன ரெசபிகளை சுவைக்கும் ஒரு நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இரண்டாவது புட்டும் வடையும் பீட்சாவை விட தாழ்ந்தவை. மூன்றாவது புட்டும் வடையும் சாப்பிடும் ஒரு வாழ்க்கை முறை உயர்வானது அல்ல. நாலாவது போராட்டம் தொடர்ந்து நடந்திருந்தால் தமிழ் மக்களுக்கு பீசா கிடைத்திருக்காது. ஐந்தாவது உணவுதான் தமிழ் மக்களுக்கு பிரச்சினை உரிமைகள் அல்ல.

மேற்கண்டவற்றைத் தொகுத்துப் பார்த்தால் அதில் அரசியல் ரீதியான தாக்குதல் இருக்கிறது. பண்பாட்டு ரீதியி-லான தாக்குதல் இருக்கிறது. அது ஒரு மக்கள் கூட்டத்தின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகிறது. வாழ்க்கை முறையைக் கொச்சைப்படுத்துகிறது. உணவுப் பழக்க வழக்கங்களை கொச்சைப்படுத்துகிறது.

ஆனால் இது தமிழ் மக்களுக்கு புதியதல்ல. ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு முன்பு 1968ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி ஆகிய கட்சிகள் இணைந்து நடாத்திய மேதின ஊர்வலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக "தோச வட அப்பிற்ற எப்பா" - தோசை வடை எமக்கு வேண்டாம் என்று கோஷம் எழுப்பப்பட்டதை இங்கே நினைவூட்ட வேண்டும்.

ஒரு மக்கள் கூட்டத்தை அவமதிப்பது என்றால் அவர்களுடைய உணவுப் பழக்க வழக்கங்களை விமர்சிப்பதும் ஒரு வழிதான். இதற்கு உதாரணம் கோவி-ட்-19 வைரஸ் தொற்றினால் உலகம் பூராகவும் பீதியும் அதிர்ச்சியும் ஏற்பட்டபொழுது சீனாவுக்கு எதிரான கோபமும் அதிகரித்தன. உலகப் பேரரசான அமெரிக்காவின் அதிபர் அதனை வுகான் வைரஸ் அல்லது சீன வைரஸ் என்று அழைத்தார். பெரும்பாலும் சமூக வலைத்தளங்களில் அந்த வைரஸ் பரவக் காரணமாக இருந்த சீனர்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. கொ-ரோனா வைரசின் மீதான கோபத்தைத்; பயத்தை சீனர்களின் மீதான கோ-பமாக சீனர்களின் மரபுரிமை சொத்துக்களான அவர்களின் உணவுப் பழக்க வழக்கத்தின் மீதான விமர்சனமாக பலரும் முன் வைத்தார்கள்.

வரலாற்றில் இதற்கு முன்னரும் இந்த நிலைமை இருந்தது. ஒரு மக்கள் கூட்டத்தை இழிவு படுத்துவதற்கு அவர்களுடைய உணவுப் பழக்க

(தொடர்ச்சி 11ம் பக்கம்)




# கனடிய பாதுகாப்புப் படையின் உயர் மதிப்புறு விருது பெற்ற ஈழத்தமிழ் மகன் 'யாழ் இந்து' செதுக்கிய 'மாணவச் செம்மல்' வாகீசன் மதியாபரணம்

(ரொரன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)



கனேடிய பாதுகாப்புப் படையில் 22 ஆண்டுகள் அர்ப்பணிப்புடன் கூடிய பணியை ஆற்றியமைக்காக உயர் மதிப்புறு விருதான Canadian Forces' Decoration (CD) First Clasp என்னும் சிறப்பு விருதினை பெற்றுக் கொண்ட ஈழத்தமிழ் மகன் திரு. வாகீசன் மதியாபரணம் அவர்களை வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

அண்மையில் கனடாவின் தலைநகரான ஒட்டாவா மாநகரில் அமைந்துள்ள கனடிய பாதுகாப்புப் படையின் தலைமையகத்தில் இடம்பெற்ற படை நிகழ்வொன்றில் தனது சிரேஸ்ட படைத் தளபதியிடமிருந்து விருதினன்ப பெற்றுக் கொண்ட ஈழத்தமிழ் மகனும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி செதுக்கிய மாணவச் செம்மல் திரு வாகீசன் மதியாபரணம் அவர்களை எமது வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதிலும் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

இவ்வாறான கனடிய அரச சார்ந்த கௌரவத்தைப் பெற்ற வாகீசன் மதியாபரணம் அவர்கள் கனேடிய பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் ஒரு சிரேஸ்ட நிதியியல் சேவைகள் நிர்வாகியாக தற்போது பணியாற்றி வருகின்றார் என்பதும் பெருமைக்குரிய ஒரு விடயமாகும்.




சாதனையாளர் வாகீசன் மதியாபரணம் அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உருவாக்கிய மாணவச் செல்வங்களில் சிறப்புக்கள் நிறைந்த ஒருவராகவும் விளங்கியுள்ளார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற 1983 தொடக்கம் 1988 வரையிலான காலப்பகுதியில் ஒரு முக்கியமான மாணவராக விளங்கியுள்ளார்.

1986 தொடக்கம் 1988 வரை அவர் கல்லூரியின் மாணவ தலைவராக விளங்கியுள்ளார். அத்துடன் கல்லூரியின் உதைப்பந்தாட்டக் அணியின் மூன்று பிரிவுகளிலும் அங்கம் வகித்து பல போட்டிகளில் வெற்றிகளை ஈட்டுவதற்கு காரணமாக இருந்துள்ளார். அத்துடன் யாழ் இந்துக் கல்லூரியின் 19 வயதுக்குட்பட்ட கிறிக்கெட் அணியிலும் பங்கெடுத்துள்ளார். 1987ல் கல்லூரியின் வர்த்தக மன்றத்தின் தலைவராக செயற்பட்டுள்ளார். அத்துடன் சாரணர் அணியையும் அலங்கரித்துள்ளார்.



பின்னர் 1988ம் ஆண்டு கனடாவிற்கு குடிபெயர்ந்த வாகீசன் அவர்கள் கனடிய இராணுவ பயிற்சிக் கல்லூரியில் இணைந்து பட்டம் பெற்று 1995ம் ஆண்டு கனடிய இராணுவத்தில் இணைந்து கொண்டார். அதன் தொடர்ச்சியான காலப் பகுதியில் கனடாவின் பாதுகாப்புப் படையின் சார்பில் ஐக்கிய நாடுகள் சபையிலும் நேட்டோ நாடுகளின் சமாதானப் படையிலும் பணியாற்றுவதற்கு அழைக்கபட்டார்.

2003ம் ஆண்டளவில் ரொரென்ரோவில் அமைந்துள்ள பாதுகாப்பு தொடர்பான ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றிய காலத்தில் இங்குள்ள தமிழ்ச் சமூகத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு பல சமூகப் பணிகளை ஆற்றத் தொடங்கினார். ஒரு கட்டத்தில் தமிழர் சமூகத்தின் கொண்ட அக்கறை காரணமாக TVI/CMR ஆகிய தமிழ் ஊடக நிறுவனங்களில் தொண்டராக இணைந்து கொண்டார். அப்போது மேலும் ஆர்வம் காரணமாக குறுகிய கால விடுமுறையை எடுத்துக் கொண்டு முழுநேரமாக மேற்படி TVI/CMR ஊடகங்களின் வளர்ச்சிக்காக உழைத்தார். குறிப்பாக, மேற்படி ஊடக நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டமிடல் இயக்குனராக 2005ம் ஆண்டு தொடக்கம் 2007ம் ஆண்டு வரை பணியாற்றிய பின்னர் மீண்டும் கனடிய பாதுகாப்புப் படையில் இணைந்து கொண்டார்.



கனடாவில் மிகவும் பொறுப்புக்கள் நிறைந்த பதவிகளில் அமர்ந்திருந்தாலும் தான் கல்வி கற்று தன்னை உயர்ந்த ஒரு இடத்தில் அமர்த்தியிருக்கின்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கனடாவில் இயங்கும் அதன் பழைய மாணவர் சங்கத்தில் இணைந்து அந்த சங்கத்தின் வளர்ச்சிக்காகவும் தமது தாய்கல்லூரியின் உயர்ச்சிக்காகவும் அரும்பாடு பட்டார். தொடர்ந்து யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கனடா பழைய மாணவர் சங்கத்தோடு தன்னை இணைத்துக்கொண்டு செயற்பட்டுவருகின்றார். மேலும் இவர் எமது தாயகத்தில் பொருளாதாரக் கஸ்டங்களால் தமது கல்வியை சிறந்த முறையில் தொடரமுடியாமல் உள்ள தமிழ் மாணவர்களின் நலன் கருதி, "தமிழ் மாணவர்கள் உதவித் திட்டம்" (Tamil Students Assistance) என்னும் அமைப்பை சில நண்பர்களோடு இணைந்து ஆரம்பித்து தொடர்ந்து இந்த நற்பணியை ஆற்றி வருகின்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



வாகீசன் அவர்கள் தற்போது தனது குடும்பத்தினரோடு வசித்து வருகின்ற ஒட்டாவா மாநகரில் உள்ள தமிழ் அமைப்புக்களோடும் இணைந்து, அங்கும் பல சமூக மற்றும் சமயப்பணிகளை ஆற்றிவருகின்றார்.

## புட்டு அரசியல்

(10ம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கங்களை இழிவுபடுத்தும் ஒரு போக்கு தொடர்ச்சியாக வரலாற்றில் காணப்படுகிறது. முஸ்லிம் சமூகத்தை இழிவுபடுத்துவதற்கு பன்றி இறைச்சியை இழுத்து கதைக்கும் ஒரு போக்கு பரவலாக உண்டு.

தமிழ்ச் சமூகத்தில் குறிப்பிட்ட பிரிவினரை அல்லது பிரதேசத்தை அல்லது சாதியை இழிவுபடுத்துவதற்கு இவ்வாறு உணவுப் பழக்க வழக்கங்களை சுட்டிக்காட்டித் திட்டும் ஒரு போக்கை காண முடியும்.

உதாரணமாக கிறிஸ்தவர்களை விமர்சிக்கும் போது வேதக்காரர்கள் மாட்டிறைச்சி தின்பவர்கள் என்று இந்துக்களில் ஒரு பகுதியினர் விமர்சிப்பதுண்டு.

இப்பொழுது இறைச்சிக்காக மாடு வெட்டுவதை அரசாங்கம் தடுக்கப் போகிறது என்று ஒரு எதிர்பார்ப்பு உண்டு. இந்த எதிர்பார்ப்பின் பின்னணியிலும் மாட்டிறைச்சிக் கறி சாப்பிடும் சமயங்களையும் சமூகங்களையும் விமர்சிக்கும் ஒரு போக்கைக் காணலாம்.

இவ்வாறான ஒரு வரலாற்றுப் போக்கின் ஆகப் பிந்திய விவகாரம்தான் புட்டும் வடையும் விவகாரமாகும். இது தொடர்பில் சமூக வலைத்தளங்களைப் பார்த்தால் புட்டு புராணம் ஒன்றை பரவலாக காண முடியும். புட்டின் பூர்வீகம் தொடர்பான ஆராய்ச்சிகளையும் பரவலாக பார்க்க முடியும்.

இந்துக்களைப் பொறுத்தவரை சிவபெருமானை பிட்டுக்கு மண் சுமந்த பெருமான் என்று அழைப்பார்கள். பாண்டிய மன்னனின் காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் செம்மனச்செல்வியின் கதையில் அது காணப்படுகிறது.

காவிரியாறு பெருக்கெடுத்து ஓடிய பொழுது ஊர் மக்களை அணை கட்டுவதற்கு மன்னன் அழைத்தான். ஊரில் ஒரு பாட்டி இருந்தார். பெயர் செம்மனச்செல்வி. பிட்டு அவித்து விற்று வாழ்க்கையை நடத்தி வந்தார். அவருக்கு யாரும் இல்லை. அவரால் அணை கட்ட முடியாது. கூலிக்கு ஆளை அமர்த்தவும் காசில்லை. அவர் சிவபெருமானிடம் வருந்தி அழுதார்.

சிவன் ஒரு கூலியாளாக அவரிடம் வந்தார். கூலிக்கு பதிலாக பிட்டு அவித்து தருவேன் என்று பாட்டி சொன்னாள். உதிர்ந்த பிட்டுகளை எனக்குத் தா உதிராத பிட்டுகளை நீ விற்றுவிடு என்று சிவபெருமான் சொன்னார். பாட்டியும் புட்டை அவிக்கத் தொடங்கினார். அவித்த புட்டெல்லாம் உதிரத் தொடங்கியது. சிவபெருமான் எல்லாவற்றையுமே போட்டுப் பிடித்தார். உண்ட களைப்பில் ஒரு மர நிழலில் உறங்கி விட்டார். மன்னன் அணைக்கட்டு வேலை நடக்கிறதா என்று பார்க்க அந்தப் பக்கம் வந்தான் வேலை செய்யாமல் படுத்திருக்கும் கூலியை கண்டான். பிரம்பை எடுத்து முதுகில் அடித்தான். அது சிவனின் மேல் விழுந்த அடி. முழு உலகத்தின் மீதும் விழுந்தது. அடித்த மன்னனின் முதுகிலும் விழுந்தது. இதுதான் செம்மனச்செல்வியின் கதை.

அது பழைய கதை. புட்டுக்கு மண் சுமந்த பெருமானின் கதை. இப்பொழுது புதிய கதை. அது புட்டை இழிவு செய்த போலீஸ்காரரின் கதை. போராட்டத்தை கீழ்மைப்படுத்தக் கூறிய கருத்து. ஆனால் பிரசாத் பெர்னாண்டோ அடித்த அடி எல்லா தமிழர்களின் முதுகிலும் விழுந்தது. அவருடைய முதுகிலும் விழுந்தது. ஏனெனில் அது தமிழ் மக்களை ஒன்று திரட்டி விட்டது. நீதிமன்றத்தில் தான் கூறிய வார்த்தைகளுக்கு இப்படி ஒரு திரண்ட எதிர்வினை இருக்கும் என்று அவர் எதிர்பார்த்திருக்க மாட்டார்.

# முழுமையான பிடியில் இன்று வெள்ளிக்கிழமை முள்ளியவளை துயிலுமில்லம்!

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தின் பெரும் பகுதி இராணுவத்தினரின் பிடியில் இருந்துவரும் நிலையில் மீதமாக உள்ள ஒரு பகுதியை துப்பரவு செய்து கடந்த வருடங்களில் மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெற்றன.
இம்முறை நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவை தொடர்ந்து குறித்த இடத்தில் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் மற்றும் பொலிசார் நீதிமன்ற கட்டளையை மீறி நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறவிடாது தடுக்கும் முகமாக குறித்த பகுதியில் நிலை கொண்டுள்ளனர்.

# இரணைப்பாலை துயிலுமில்லத்தில் இன்று வெள்ளிகிழமை கடும் பாதுகாப்பு!

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தின் கடந்த வருடங்களில் மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகள் மிகவும் பிரமாண்டமாக இடம் பெற்றன
இம்முறை நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவை தொடர்ந்து குறித்த இடத்தில் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் மற்றும் பொலிசார் நீதிமன்ற கட்டளையை மீறி நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறவிடாது தடுக்கும் முகமாக குறித்த பகுதியில் நிலை கொண்டுள்ளனர். குறித்த பகுதியில் இராணுவம் பொலிசார் நிலைகொண்டுள்ள விடயத்தை ஊடகங்களையும் ஒளிப்பதிவு செய்ய அனுமதி மறுத்து வருகின்றனர்.

# மண்காத்த மாவீரர்கள் நினைவாக சூழல் காக்கும் மரங்களை நாட்டுவோம்

**- பொ. ஐங்கரநேசன்**



மாவீரர்களுக்காகக் கண்ணீர் சொரியும் இக்கார்த்திகை மாதம் வானம் மழைநீர் சொரியும் மாதமுமாக இருப்பதால் மண்காத்த மாவீரர்கள் நினைவாக சூழல் காக்கும் மரங்களையும் நாட்டுவோம். இந்த உயிருள்ள நினைவுச் சின்னங்களில் எம்மாவீரச் செல்வங்கள் தினம் தோறும் முகம் காட்டுவார்கள் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் குறிப்பிட்டுள்ளார்.

மாவீரர் தினம் தொடர்பாக அவர் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில், மாவீரர்கள் எமது மண்ணின் காவலர்கள். இந்த மண்ணையும் மக்களையும் அளவுக்கு அதிகமாக நேசித்ததன் காரணமாகத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள். தங்கள் குடும்ப உறவுகளைக் கடந்து மொத்தத் தமிழினத்தினதும் வலிகளைத் தங்கள் தோள்மேல் சுமந்தவர்கள். ஈகைக்கு உவமை வேறு இல்லாத அளவுக்கு தங்கள் இன்னுயிரை ஈந்த தியாக சீலர்கள்.

உக்கிரமான போர் நகர்வுகளின் போதுகூடப் படையினரின் நினைவு நடுகற்களைப் பாதுகாத்த முன்னுதாரணர்கள். போர் மரபுகளை மீறி இவர்களது நினைவு நடுகற்களைப் படையினர் சிதைத்து அழித்தாலும், இவர்தம் நினைவஞ்சலி நிகழ்ச்சிகளுக்குத் தடைவிதித்தாலும் எம் ஆழ்மனதில் நீங்காத நினைவுகளாக இடம்பெற்றிருப்பவர்கள். இவர்தம் வித்துடலணுக்கள் நிலம், நீர், காற்று என்று அரூபமாக வியாபித்திருந்தாலும் நினைக்கும்தோறும் சோதிப் பெருவெளிச்சமாய் முகம் காட்டுபவர்கள். திக்கற்றுத் தவிக்கும் தமிழ்மக்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காக ஒளிவீசிக் கொண்டிருப்பவர்கள்.

தமிழர்கள் விக்கிரக வழிபாட்டுக்கு முன்னர் மரங்களை வளர்த்து இறைவனாக வழிபடும் வழக்கத்தைக் கொண்டிருந்தவர்கள். இப்போதும் ஆலயங்களில் தலவிருட்சங்களாக மரங்களை வளர்த்து வழிபடும் மரபைக் கடைப்பிடிப்பவர்கள். மாண்டவர்கள் நினைவாக நடுகற்களை நிறுவுவதற்கு முன்னர் மரங்களை உயிருள்ள நினைவுச் சின்னங்களாக நட்டுப் பராமரிக்கும் மரபைக் கொண்டிருந்தவர்கள். அந்தவகையில் மாவீரர் புகழ் பாடி, அவர்களின் நினைவு நாளில் இல்லங்கள்தோறும் சுடரேற்றி அஞ்சலிக்கும் நாம் அவர்களின் நினைவாக மரமொன்றையும் நட்டுவைப்போம்.

மாவீரர்களைப் போன்றே மரங்களும் இந்த மண்ணின் பாதுகாவலர்கள். இவை வேறு எந்த உயிரினத்தையும்விட மண்மீது கூடுதலான நேசிப்பும் பிடிமானமும் கொண்டவை. தங்கள் இனத்தையும் கடந்து புவிக்கோளின் ஒட்டுமொத்த உயிர்ப்பல்வகைமையையும் தாங்கி நிற்பவை. எமது எதிர்காலச் சந்ததி இந்த மண்ணில் வளமாக வாழ்வதற்கான உத்தரவாதமும் இவையே. மாவீரர்தம் இலட்சியக் கனவுகளும் இம்மண்ணில் எமது மக்களின் வளமான சுதந்திரமான நீடித்த வாழ்வை உறுதி செய்வதாகத்தான் இருந்தன.

மாவீரர்களுக்காகக் கண்ணீர் சொரியும் இக்கார்த்திகை மாதம் வானம் மழைநீர் சொரியும் மாதமுமாக இருப்பதால் மண்காத்த மாவீரர்கள் நினைவாக சூழல் காக்கும் மரங்களையும் நாட்டுவோம். இந்த உயிருள்ள நினைவுச் சின்னங்களில் எம்மாவீரச் செல்வங்கள் தினம் தோறும் முகம் காட்டுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவில் ஊடகவியலாளர் தவசீலன் இன்று இராணுவத்தால் தடுத்து வைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு காவல்துறை பிரிவுக்குட்பட்ட தேவிபுரம் பகுதியில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் அவர்களை இராணுவத்தினர் குறித்த இடத்தில் இருந்து வெளியேற மறுத்த நிலையில் புதுக்குடியிருப்பு காவல்துறையினரின் உதவியுடன் குறித்த ஊடகவியலாளர் வெளியேறியுள்ளார்.
இந்த சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், இன்று வெள்ளிக்கிழமையன்று 27ம் திகதி மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொள்வதற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றினால் தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவான காவல்துறையினர் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் பாதுகாப்பு கடமைகளில் வீதிகள் மற்றும் பொது இடங்களில் குறிப்பாக மாவீரர் துயிலும் இல்லங்களில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.



இந்நிலையில் நீதிமன்ற உத்தரவை நடைமுறைபடுத்தும் முகமாக துயிலுமில்லங்களில் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் செய்தி அறிக்கையிட சென்றநிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்று இருக்கின்றது.
நேற்று பிற்பகல் தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருக்கின்ற வளாகத்திற்கு அண்மையாக சென்ற ஊடகவியலாளர் குறித்த மாவீரர் துயிலும் இல்லத்தை காணொளி பதிவு செய்த போது குறித்த இடத்திற்கு 500 மீட்டர் தொலைவில் நின்ற இராணுவ வீரர்கள் இருவர் குறித்த இடத்திற்கு வருகை தந்து ஊடகவியலாளரோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டபோது தங்களை ஒளிப்பதிவு



செய்யக்கூடாது என மிரட்டி ஊடகவியலாளரை குறித்த இடத்தில் இருந்து வெளியேற முடியாதவாறு தடை செய்திருக்கின்றனர்.

இதேவேளை குறித்த பகுதியில் கடமையிலிருந்த இராணுவ சிப்பாய் தன்னுடைய இராணுவ சீருடையை சரியாக அணியாத நிலையிலேயே இவ்வாறு ஊடகவியலாளருடன் வருகை தந்து தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தமையும் சுகாதார நடைமுறைகளை பேனாதநிலையிலும் இருந்துள்ளார்.
முல்லைத்தீவு மாவட்டத்திலே தொடர்ச்சியான இந்த செயற்பாடுகள் முல்லைத்தீவில் இராணுவ ஆட்சியா இடம்பெறுகிறது என்ற சந்தேகத்தினை உறுதி செய்கிறது .
அத்தோடு குறித்த இடத்தில் ஊடகவியலாளர் உடன் தர்க்கப்பட்ட இராணுவ சிப்பாய் ஊடகவியலாளர்களின் காணொளி பதிவுகளையோ, தொலைபேசியை கூட பார்க்க முடியும் அதற்க்கு தமக்கு அதிகாரம் உண்டு எனவும் மிரட்டல் விடுத்துள்ளார்.

# கோவிட்-19 தடுப்பூசிக்குரிய அங்கீகாரத்தை கனடாவின் மத்திய சுகாதாரப் பிரிவு டிசம்பர் மாத நடுப்பகுதியில் வழங்கும்

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

விஞ்ஞானிகள், தற்போது தங்கள் பணியை ஆரம்பித்துவிட்டார்கள்.
எனினும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகளில் உள்ள அரச அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு அந்தந்த நாடுகளில் மேற்கொள்ளப்படும் நடைமுறை-களை கேட்டறிந்து கொள்ளும் முயற்சிகளில் இறங்கியுள்ளதாகவும்.

இவ்வாறாக ஐக்கிய அமெரிக்காவின் சுகாதாரத்துறை அதிகாரிகளோடு மேற்கொள்ள்பட்ட தொடர்புகளின் படி, ˆகணைநச நிறுவனத்தின் தயாரிப்பான தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதா எனபது பற்றி தீர்மானம் எடுக்க டிசம்பர் 10ம் திகதிவரை காத்திருக்க வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.
இந்த விடயம் தொடர்பாக எமது செய்தியாளர் அனுப்பியுள்ள குறிப்பில் கனடா தேசத்தில் வாழும் மக்களின் உயர் காக்கும் வகையில்ட எதிர்பார்க்கப்படும் தடுப்பூசி விடயத்தில் கனடா அரசாங்கம் சார்பாக முக்கிய பணியாற்றுபவர்களில் இருவர் இந்தியாவை தாயகமாகக் கொண்டவர்கள் என்றும் அவர்களில் ஒருவர் மத்திய அமைச்சர் அனிற்றா ஆனந்த் மற்றும் கனடாவின் மத்திய சுகாதார நடுவத்தின் பிரதம மருத்துவ ஆலோசகரான சுக்கிரியா சர்மா ஆகியோரே முக்கிய பங்கினை வகிக்கின்றார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# New support programs are available for those who need them

A stronger, more accessible EI and new recovery benefits

- Canada Recovery Benefit
- Canada Recovery Sickness Benefit
- Canada Recovery Caregiving Benefit

Learn more at canada.ca/coronavirus



Government of Canada Gouvernement du Canada

Canada




**நான் கனடாவுக்கு புதியவர்.**
**நான் வீடு வாங்க முடியுமா?**

தெரிவு செய்யப்பட்ட வங்கிகளில் உள்ள எங்கள் மொழி ஆலோசகர்கள் உரையாடுவார்கள் அல்லது புதிய வாடிக்கையாளர்களுக்கான எங்கள் சலுகைகளை இணையத்தில் தேடுங்கள்.

ஒரு அடமானம் பெறுங்கள் மேலும் நீங்கள் அதில் **$3000** வரை **Cashback** பெறலாம்*

உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க நாங்கள் இருக்கின்றோம்

**nbc.ca**/tamil

* Offer valid until November 30, 2020. The mortgage loan must have a fixed or variable rate with of 4 years or longer at the current promotional rate. The cashback amount varies according to the amount of the loan: $1,000 cash back for loans between $100,000 and $249,999, $1 500 cash back for loans between $250,000 and $499,999, $2 500 cash back for loans between $500,000 and $749,999, and $3,000 cash back for loans above $750,000. Commitment required to maintain your loan for the duration of the term. Subject to National Bank credit approval. Certain conditions apply.

# கொவிட்-19 உலகத்தொற்று கனடாவில் தீவிரமாக உள்ளது.

அனைத்து பொதுச் சுகாதார நடவடிக்கைகளையும் தொடர்ந்து கடைப்பிடியுங்கள்:

- ஒன்று கூடல்களில் உள்ளூர் வழிகாட்டல்களை பின்பற்றுங்கள்
- சரீர இடைவெளியை பேணுங்கள்
- உங்கள் கைகளை கழுவுங்கள்
- முகக் கவசம் அணியுங்கள்
- உங்களுக்கு நோய் அறிகுறிகள் இருந்தால், அவை இலேசாக இருப்பினும், வீட்டிலேயே தங்கி இருங்கள்
- Canada கொவிட் எச்சரிக்கைச் செயலியைப் பதிவிறக்கவும்



கொவிட் எச்சரிக்கைச் செயலியைப் பதிவிறக்கவும் உங்களையும், பிறரையும் பாதுகாருங்கள். Canada.ca/coronavirus அல்லது 1-833-784-4397 மூலம் அறியுங்கள்.

Government of Canada Gouvernement du Canada

Canada

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# Carefirst Family Health Team


*Accepting New Patients*

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



*- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

# #23 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

வணங்குதற்குரிய கவியரசு. கண்ணதாசன் ஐயா அவர்கள் வாழ்ந்த காலத்தில் "குமுதம்" வார இதழில் "சந்தித்தேன் சிந்தித்தேன்" எனும் தலைப்பின் கீழ் வாரம் ஒரு பிரபலத்தை பற்றி எழுதி வந்த கட்டுரைகள் வரலாற்று பதிவாகும். "எங்களைப் பற்றி கவிஞர் எழுத மாட்டாரா? என பலர் ஏங்கியதுண்டு"! அட! கவிஞர் பெருமான் என்னைப் பற்றி குமுதத்தில் எழுதி பெருமைப்படுத்தி விட்டாரே! என 3 திரை தாரகைகள் மகிழ்ந்து சிலிர்த்துக் கொண்டார்கள். அவர்களுள் பழம்பெரும் நடிகை டி ஆர் ராஜகுமாரி, திருமதி தேவிகா, திருமதி பு்பலதா மூவரும் அடங்குவர்.

நடிகர்திலகத்தின் திரை கதாநாயகிகள் அவருடன் இணைந்து நடித்த பல முன்னணி நட்சத்திரங்களை பற்றி எழுதிவரும் இவ்வேளையில், அவருடன் இணைந்து துணை பாத்திரமேற்று நடித்த தமிழ் திரையுலகின் மூத்த நாயகிகளில் ஒருவர் என்று பேசப்படுபவரும் அந்த காலத்திய "கனவுலக தேவதை" என்று எம் போன்றவர்களின் தூக்கத்தை கலைத்தவருமாகிய டி ஆர் ராஜகுமாரியும், சிவாஜி ஐயாவும் நடித்த சில படங்களை பார்ப்போம்.

அதற்குமுன் கவியரசு அவர்கள் ராஜகுமாரி அம்மா பற்றி எழுதிச் சென்ற சில வரிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

"...தன்னுடைய வாழ்க்கையைத் தியாகம் செய்து தன் உடன் பிறந்தவர்களை காப்பாற்றுவதற்கென்று சில குடும்பங்களில் சிலர் மட்டுமே பிறக்கிறார்கள், இல்லை அவதரிக்கிறார்கள். இதனை "சர்வ பரித்தியாகும்" என்று வடமொழி கூறும். இலக்குவனைத் தம்பியாக பெற்ற ராமனைப் போல், சுமித்திரையை தாயாக பெற்ற இலக்குவனை போலவும், இலக்கணத் தேவதைகள் சிலர் இன்றைக்கும் இல்லாமலில்லை.

அவர்கள் தங்கள் சொந்த ஆசைகளை எல்லாம் எடுத்து கங்கையில் கரைத்து விட்டு, தாங்கள் பிறந்த குடும்பத்தின் நலனையே கவனிக்கிறார்கள்.



நூற்றுக்கணக்கான நடிகைகளை நான் வாழ்க்கையில் சந்தித்திருக்கிறேன். ராஜகுமாரியுடன் பேசும்போது "அம்மா" என்று தான் பயபக்தியோடு அழைக்கத் தோன்றும். சமயத் துறையில் இறங்கியிருந்தால் ராஜகுமாரியும் வணங்கத்தக்க சாரதாமணி ஆகியிருப்பார். தன் குடும்பத்தை தவிர வேறு சிந்தனைகள் இல்லாமல் வாழும் ராஜகுமாரிக்கு அடுத்த பிறவியில் நானும் ஒரு தம்பியாக பிறக்க ஆண்டவன் அருள்வானாக! கவியரசு அவர்களால் கண்ணிய மிக்கவராக பாராட்டுப் பெற்ற ராஜகுமாரி சிவாஜி அவர்களுக்கு வில்லியாக தோன்றிய பாத்திரம் இன்றும் பேசப்படும் படைப்பாகும். சிவாஜி அவர்கள் திரையுலகில் அறிமுகமாகும் முன்பே புகழின் உச்சியில் மிளிந்தவர் டி ஆர் ஆர் ஆகும். சிவாஜி அவர்கள் நடித்த "மனோகரா"வில் ராஜகுமாரி ஏற்று நடித்த "வசந்த சேனை" பாத்திரமே பிற்காலத்தில் அவருடைய திரை வாழ்வின் திருப்புமுனை ஆயிற்று! டி ஆர் ராஜகுமாரி என்றால் "வசந்தசேனை" யா என ஆச்சரியம், வியப்பு பார்வையுடன் அந்த பாத்திரமாகவே அவரை விழிக்க தொடங்கினார்கள்.

1954இல் வெளிவந்த "மனோகரா" திரைப்படம் நடிகர்திலகம், கலைஞர் மு கருணாநிதி இருவரையும் தமிழ்க்கோபுரத்தில் சிங்காசனம் அமைத்து உட்கார வைத்த உன்னதத் திரைக்காவியம்.

அந்தப் புகழ்பெற்ற படத்தில் இப்படி ஒரு காட்சி. இளவரசன் மனோகரனும் பட்டத்து ராணி பத்மாவதி (பி. கண்ணாம்பா)யும்...

பத்மா: மனோகரா! நில்! எங்கே ஓடுகிறாய்?

மனோ: அம்மா! இன்னும் என்ன... உங்கள் சபதத்தை நிறைவேற்றி விட்டபிறகு...

பத்மா: சொல்லுகிறேன். முதலில் வாளை உறையில் போடு.மகாராஜாவிற்கோ... வசந்த சேனைக்கோ... என் அனுமதியின்றி எந்தவிதமான தீங்கும் செய்வதில்லை, என்று ஆணையிடு! என்மேல் ஆணையிடு!

மனோ: அம்மா..!

பத்மா: தாயின் மேல் ஆணையிடு!

மனோ: அரசரை ஒன்றும் செய்வதில்லை அம்மா!

பத்மா: கூடாது... வசந்தசேனைக்கும் சேர்த்துதான்.

மனோ: வசந்தசேனை! வட்டமிடும் கழுகு...! வாய்பிளந்து நிற்கும் ஓநாய்..! நம்மை வளைத்துவிட்ட மலைப்பாம்பு...! அவளுக்கா இரக்கம்! முடியாது.. கூடாது..!

இப்படியாக மனோகரன் சிவாஜி, வசந்தசேனை ராஜகுமாரியுடன் பெரிதும் குமுறும் காட்சிகள் பல. சூழ்ச்சிக்காரி, புரட்டுக்காரி.. தளுக்கு மேனியாள்... வஞ்சகி என்றே வசைமாரி பொழிவார். அக்காலத்தில் இப்படம் வெளியான பின் தமிழக "அரசியல், சமூக, பொருளாதார மற்றும் குடும்பத்தை நாசம் செய்யும் பெண்மணிகளை "அவள் ஒரு வசந்தசேனை" என்று அடையாளம் காட்டுகிறார்கள். இது கலைஞரின் சமூகப் பார்வைக்கு கிடைத்த வெற்றி என்பேன். இவ்வாறு நடிகர் திலகத்துடன் "மனோகரா" "அன்பு" "தங்கப்பதுமை" ஆகிய படங்களில் டி.ஆர்.ஆர் நடித்திருந்தார்.

"தங்கப்பதுமை"யில் அப்பாவி ராஜாவைத்தியனாக வரும் சிவாஜியை தன்வசப்படுத்தும் ஆடல்அழகியாக வேடமேற்று நடித்திருப்பார். பின் தன் தவறை உணர்ந்து திருந்திய வளாக சிவாஜிக்கு உதவுவார். ஒரு சில படங்களில் நடித்திருந்தாலும் திறமையும், அழகும், அனுபவமும், மிகக் கொண்டிருந்த திரையுலகின் மூத்த நாயகியான டிஆர் ராஜகுமாரி உடன் இணைந்து நடித்ததில் சிவாஜிக்கும் பெருமையே!

"நான் காதலெனும் கவிதை சொன்னேன் கட்டிலின் மேலே.." என்று சிவாஜி அவர்கள் தன் விழிகளினால் காதல் சிருங்காரம் காட்ட, "அந்தக் கவிதைக்கு நான் பரிசு தந்தேன் தொட்டிலின் மேலே..." என்று திருமதி சௌகார் ஜானகி நாணமும் தாய்மையும் கலந்து தாலாட்டுப் பாடுவது போல் ஒரு காட்சி "பார் மகளே பார்" படத்தில் இடம்பெறும், "நீரோடும் வைகையிலே நின்றாடும் மானே" என்று ஆரம்பமாகும் கவியரசு கண்ணதாசனின் பாடல் வரிகள் அவை. இருவரும் மிக அருமையாக பாடல் வரிகளுக்கு பாவம் காட்டி குழந்தைகளைத் தாலாட்டுவார்கள். நடிகர் திலகம் செல்வந்தராக, சீமானாக ஒரு பாத்திரமேற்பாராகில், அவருக்கு இணையான செல்வச்சீமாட்டியாகவோ, நவநாகரிகம் மிகுந்த பணக்கார குடும்ப பெண்ணாகவும் அன்றிக் காதலியாகவோ சிவாஜிக்கு சற்றும் சளைக்காமல் திறம்பட நடித்து புகழ் பெற்றவர் சௌகார் ஜானகி அவர்கள். "பாலும் பழமும்" "பார் மகளே பார்" "புதிய பறவை" "உயர்ந்த மனிதன்" ஆகிய படங்களில் அவர்கள் ஏற்றுக் கொண்ட பாத்திரங்கள் அத்தகையதே ஆகும். இயல்பாகவே இந்திய கலாச்சாரம், பண்பாடுகளோடு மேலைத்தேய பழக்கவழக்கங்களில் நிறைந்த பரிச்சயமும், ஆங்கில மொழி பேசுவதில் போதிய அறிவும் பெற்றவர் ஜானகி அவர்கள். "சௌகார்" என்ற தெலுங்கு படத்தில் முதன்முதல் தனது நடிப்பு பணியை ஆரம்பித்து திறம்பட செய்ததால் "ஜானகி" என்ற பெயருக்கு முன்னால் சௌகார் ஒட்டிக்கொண்டு விட்டது. அதுவே நிலைத்த பெயராகிவிட்டது. கணேசன் முன் "சிவாஜி" பட்டம் இடம்பெற்றது போலாகும்!



பணக்காரியாக, நவநாகரீக பெண் வேடத்தில் எவ்வளவு வெளுத்து வாங்குவாரோ அதேபோன்று ஏழைக் குடும்பத்துப் பெண்ணாக, படிக்காத ஒருவனுக்கு மனைவியாகவும், பாமரத்தனம் மிகுந்தவளாகவும் நடிப்பதில் அவருக்கு நிகர் அவரே! நடிகர் திலகம் அவர்களுடன் முதன்முதலில் "படிக்காத மேதை"யில் ஜோடி சேர்ந்து "ரங்கன்" என்ற படிக்காத முரட்டுத்தனம் மிகுந்த அப்பாவிக்கு வாழ்க்கைப்பட்டு பொறுமையெனும் நகையணிந்த இல்லத் தலைவியாக நடித்து ஜனாதிபதி பரிசு பெற்ற சித்திரத்தின் நாயகியாவார் ஜானகி அவர்கள்.

தொடர்ந்து "பாவைவிளக்கு" (நான்கு நாயகிகளில் ஒருவர்) நாயகன் சிவாஜியின் மனைவி கௌரியாகவும், "பார் மகளே பார்" "புதியபறவை" "பாலும்பழமும்" "மகாகவி காளிதாஸ்" "உயர்ந்த மனிதன்" ஆகிய படங்களில் ஜோடி சேர்ந்தும், "பார்த்தால் பசி தீரும்" படத்தில் துணைப் பாத்திரத்திலும் "பாபு" "நீதி" ஆகிய படங்களில் குணச்சித்திர பாத்திரமேற்று சிவாஜியுடன் நடிப்பில் மோதுவார். "உயர்ந்த மனிதன்" "புதிய பறவை" ஆகிய இரு படங்களிலும் இவருடைய சீமாட்டி தனமும், ஆடம்பரமும் மிக்க நடிப்பு தனித்தன்மை வாய்ந்தது. நடிகர் திலகத்துடன் ஜோடி சேர்ந்த நாயகிகளுள் தனித்து பேசக்கூடியளவு திறமையும் ஆற்றலும் வாய்ந்த நடிகை என்பது எனது கணிப்பாகும்!

"அமுதை பொழியும் நிலவே - நீ
அருகில் வராததேனோ..." எனும் கவிஞர் கு.மா பாலசுப்பிரமணியத்தின் பாடல் வரிகளை தனது அமுதக் குரலால் திருமதி சுசீலா அம்மா பாடவும் அதற்கு தகுந்தார்போல் அழகுமுகம் காட்டி வாயசைத்து நடித்திருப்பார், அன்றைய காஜல் அகர்வால் திருமதி ஜமுனா அவர்கள். நடிகர் திலகம் "டார்ஜான்" போல் காட்டு மனிதனாக ஒளிந்திருந்து "அமுதை பொழியும் நிலவே" பாடலை வினோதமாக கேட்டுக்கொண்டிருப்பார். அழகேயுருவான ஜமுனாவை விழிகளால் விழுங்கிக்கொண்டு வேடிக்கை பார்க்கும் காட்சியது! திருமதி ஜமுனாவுடன் முதன்முதல் "பொம்மை கல்யாணம்" படத்தில் ஜோடி சேர்ந்து "அன்பே நீ அங்கே நான் இங்கே இன்பம் காண்பது எங்கே?" என சோககீதமிசைத்தார்? இவர்கள் இருவரும் இணைந்து நடித்த "நிச்சயதாம்பூலம்" மறக்கமுடியாத குடும்ப சித்திரம். இன்றும் கூட காதலர்களும், கணவன் மனைவியரும் பார்த்து மகிழ வேண்டிய படமாகும்! திருமதி. ஜமுனா அலட்டல் இல்லாத யதார்த்த நடிகை. மனமொத்த தம்பதிகளின் மென்மையான காதல் உணர்வுகளைப் பிரதிபலிப்பது மாத்திரமல்ல காதல் மனையாளை நெஞ்சில் நிறுத்தி "எங்கே என் காலமெல்லாம் கடந்து விட்டாலும்... ஓர் இரவினிலே முதுமையை நான் அடைந்து விட்டாலும்... மங்கையுனை தொட்ட உடன் மறைந்து விட்டாலும் நான் மறுபடியும் பிறந்து வந்து மாலை சூடுவேன்" என்று "ஒருவனுக்கு ஒருத்தியென" உண்மை அன்பை வெளிப்படுத்தி சிவாஜி அவர்கள் தன் காதலியைப் பார்த்து "பாவாடை தாவணி"யில் பார்த்த உருவமா இல்லை, பூவாடை வீசி வரப் பூத்த பருவமா.." எனக் காதல் கீதமிசைத்து நடித்த காட்சி இன்றும் என் மனத்திரையில்...

*காட்சிகள் விரியும் - வீணை மைந்தன்*

Mississauga. திடமாக. தயாராக.

வீட்டிலிருங்கள்
செயல்பாட்டில் இருங்கள்

நீங்களும் உங்கள் குடும்பத்தினரும்
ஆரோக்கியமாகவும் செயல்பாட்டுடனும்
இணைப்பில் இருந்தபடியும்
இருப்பதற்கான யோசனைகள்

தியானம்
ஊட்டச்சத்துணவு
உடற்தகுதி
மூத்தகுடிமக்களுக்கு ஆன்லைன் செயல்பாடுகள்
குடும்பக் கேளிக்கை

வருகை தரவும்
mississauga.ca/recreation

MISSISSAUGA

# மரடோனா எனும் மந்திரவாதி

**சிவா பரமேஸ்வரன் - மூத்த செய்தியாளர்**



அவருக்கு முன்னரும் அப்படியொரு வீரர் இருந்ததுமில்லை அவருக்கு பிறகு இருக்கப் போவதுமில்லை.

பத்தாம் எண் சட்டை விளையாட்டுலகில் பிரபலம். கிரிக்கெட்டில் டெண்டுல்கர், கால்பந்தில் பெலே, மரடோனா, மெஸ்சி, நெய்மார், வெயின் ரூனி, ஆலிவர் கான் எனப் பட்டியல் நீளும்.

அந்த எண்ணைக் கொண்ட சட்டையும் அதையணிந்த விளையாட்டு வீரர்களும் அமரத்துவம் பெற்றவர்கள். அதிலும் குறிப்பாகக் கால்பந்து விளையாட்டுக்கு அந்த எண் சட்டையை அணிந்த வீரர்களின் பங்களிப்பு மிகப் பெரியது.

பத்தாம் இலக்கச் சட்டைக்காரர்களில் யார் பெரியவர்கள் எனும் கேள்வி சரியானதாக இருக்காது. ஒவ்வொருவருக்கும் ஒரு தனிச்சிறப்புண்டு. அது அவர்கள் விளையாடிய காலகட்டத்தைப் பொறுத்தது. எனினும் சிலருக்கு தனித்துவமான ஒரு பேரும் புகழும் கிடைக்கிறது. அவ்வகையில் கால்பந்து உலகில் "கடவுள்" எனும் நிலையைப் பெற்றவர் மரடோனா. அவரைப் பொறுத்தவரையில் மூர்த்தி சிறியது ஆனால் கீர்த்தி பெரியது என்பது மிகவும் பொருந்தும்.



கடந்த மாதம் மணிவிழா கண்ட மரடோனா அர்ஜெண்டினாவின் தலைநகர் போனஸ் எய்ரிஸின் புறநகர்ப் பகுதியில் பிறந்தார். ஏழ்மை அவரைக் கால்பந்து விளையாட்டை நோக்கித் தள்ளியது. அதை அவர் சவாலாக ஏற்று அதில் மிகச் சிறந்த ஆளுமைகளில் ஒருவராக விளங்கினார்.

## பெலேயின் புகழாரம்

இந்நாள் வரை உலகளவில் மிகச்சிறந்த கால்பந்து வீரர் பிரேசிலின் பெலேயா அல்லது அர்ஜெண்டினாவின் மரடோனாவா இவர்களில் யார் என்பது "முட்டையா கோழியா" எனும் கதையே.

சில விளையாட்டு வர்ணனையாளர்கள் அவர் பெலேயைவிடச் சிறந்தவர் என்று கூறுவார்கள். இருபதாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த வீரரைத் தேர்வு செய்யும் போது சர்ச்சைகள் எழுந்தன. அவரா இவரா என முடிவெடுக்க முடியாத நிலையில், சர்வதேசக் கால்பந்து சம்மேளனமான ஃபிபா அந்த விருதை இருவருக்கும் கூட்டாக அளித்தது.

தொழில் ரீதியான போட்டிகளுக்கு அப்பாற்பட்டு 80 வயதான பெலே தனது அஞ்சலியில் அவருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

"நான் தனிப்பட்ட முறையில் மிகச்சிறந்த நண்பரையும், உலகம் ஒரு மாபெரும் சாதனையாளையரையும் இழந்துள்ளது. அவரைப் பற்றி கூறுவதற்கு ஏராளம் உள்ளன, ஆனால் இப்போதைக்கு அவரது குடும்பத்தாருக்கு ஆண்டவர் தைரியத்தை அளிக்கப் பிரார்த்திக்கிறேன், ஒரு நாள், அதுவும் விரைவில் இருவரும் சொர்கத்தில் சேர்ந்து விளையாடுவோம்".



அவரது அஞ்சலி மிகவும் அர்த்தம் பொதிந்தது. அவர் எந்தளவுக்கு மரடோனாவை மதித்தார் என்பதை அவருடன் பூவுலகில் விளையாட முடியாவிட்டாலும், சொர்கத்தில் விளையாட விழைகிறேன் என்று கூறுவதில் ஆயிரம் அர்த்தங்கள் உள்ளன.

சச்சின் டெண்டுல்கர் மற்றும் மரடோனா இருவருமே 16 வயதில் சர்வதேசப் போட்டிகளில் அறிமுகமானவர்கள். பின்னர் ஓய்வு பெறும் வரை தாங்கள் இல்லாமல் தேசிய அணியில்லை எனும் நிலையை ஏற்படுத்தியவர்கள்.

உயரம் குறைவாக இருந்தாலும் மரடோனாவின் கால்கள் மாயாஜாலம் செய்தன. ஆளுமை உயரத்தில் இல்லை, ஆட்டமே ஒருவரை உயரத்துக்கு இட்டுச் செல்லும் என உணர்த்தினார் மரடோனா.

பட்டுப் போன்ற மென்மையான அவரது லாவகம், உடலசைவு, தொலைநோக்குப் பார்வை, பந்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது, பந்தை உருட்டிச் செல்வது, அடுத்தவருக்கு பந்தைத் தள்ளுவது, ஆடுகளத்தில் ஆர்ப்பரித்து ரசிகர்களை உசுப்பேற்றுவது, சில வேளைகளில் ஆத்திரப்படுவது என அனைத்திலும் அவர் தனித்து விளங்கினார்.

## ஆடுகளத்தில் அசாத்திய ஆளுமை

ஐந்தடி ஐந்து அங்குலம் உள்ள ஒரு மனிதனால் கோடிக்கணக்கான ரசிகர்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடிந்தது என்பதே அவரது ஆளுமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்க முடியும். அவரது கால்கள் ஜாலங்களைச் செய்தது.

ஆடுகளத்தில் அவரது நகர்வுகள் ஊகிக்க முடியாதவையாக இருந்தன. ஒரு நகர்வைப் போன்று அடுத்தது இருக்காது.

கடந்த 1986ஆம் ஆண்டு மெக்ஸிகோவில் நடைபெற்ற உலகக் கோப்பைக்கான கால்பந்துப் போட்டி பல வகைகளில் மறக்க முடியாதது. அர்ஜெண்டினாவுக்கு அருகிலுள்ள பிரிட்டனுக்குச் சொந்தமான குட்டித் தீவான ஃபாக்லாண்ட்ஸ் தமக்குச் சொந்தம் என்று அர்ஜெண்டினா உரிமை கோரியது. இதன் காரணமாக 1982ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையே போர் மூண்டது. இறுதியில் இங்கிலாந்து வெற்றிபெற ஃபாக்லாந்து தீவுகள் தொடர்ந்து பிரிட்டன் வசம் உள்ளது.

## "ஹாண்ட் ஆஃப் காட்"

போரின் தாக்கம் நீறு பூத்த நெருப்பு போல் இரு நாடுகளுக்கும் இடையே கனன்று கொண்டிருந்தது. அச்சூழலில் 22 ஜூன் 1986 இங்கிலாந்து அர்ஜெண்டினாவுக்கு இடையேயான காலிறுதி ஆட்டம் நடைபெற்றது. இரு நாடுகளிலும், அரங்கில் கூடியிருந்த ரசிகர்களிடமும் பெரும் உற்சாகமும், உணர்ச்சியும் மேலோங்கியிருந்தது. இடைவேளை வரை இரு அணிகளும் கோல் ஏதும் அடிக்கவில்லை. இடைவேளைக்குப் பிறகு ஆட்டம் தொடங்கி ஆறு நிமிடங்கள் கடந்த நிலையில் "சர்ச்சைக்குரிய" அந்த அற்புதம் நிகழ்ந்தது.

இங்கிலாந்தில் கோல் வலைக்கு அருகே பந்தை லாவகமாக உருட்டிச் சென்று அதை சக வீரரிடம் தள்ளிவிட்டு பெனால்டி பாக்ஸை நோக்கி விரைந்த மரடோனா உயர்ந்து வந்த பந்தை தனது தலையால் முட்டி வலைக்குள் தள்ளும் போது அவரது நீண்டிருந்த இடது கையின் முட்டியையும் பயன்படுத்தி பந்தை கோல் வலைக்குள் தள்ள உலகெங்கும் எழுந்த ஆரவாரம் அடங்க நீண்ட நேரமாயிற்று.




கள நடுவராக இருந்த துனீசிய நாட்டைச் சேர்ந்த அலி பெனாஷோ அதை கோல் என்று அறிவிக்க இங்கிலாந்தின் கோல் காப்பாளர் பீட்டர் ஷில்டன் எதிர்ப்புத் தெரிவித்தார். பந்து கையில் பட்டு வந்தது, எனவே அது தவறான முடிவு என்று வாதிட, கள நடுவர், எல்லை நடுவரைக் கலந்தாலோசித்து அதை கோல் என்று அறிவித்தார். பின்னர் அந்த கோல் "ஹாண்ட் ஆஃப் தி காட்" என்று பிரபலமானது.

அதைப் பின்னர் தனது சுயசரிதையில் ஒப்புக் கொண்டார் மரடோனா. கடவுளின் கை என்று கூறியது உண்மையில் தனது கை என்று சுயசரிதையில் எழுதியிருந்தார் மரடோனா.

ஆனால் சர்ச்சைக்குரிய அந்த கோலுக்கு நான்கு நிமிடங்களுக்குப் பிறகு அவர் அடித்த கோல், "நூற்றாண்டின் கோல்" என்று இன்றளவும் விவரிக்கப்படுகிறது. தமது பகுதிக்கு வந்த பந்தை தன்வசப்படுத்திக் கொண்டு கண்கட்டி வித்தையைச் செய்யும் மந்திரவாதி போல அந்தப் பந்தை உருட்டி, மென்மையாகத் தட்டி பல வீரர்களைக் கடந்து, பாய்ந்து வந்து பந்தைப் பிடிக்க முயன்ற பீட்டர் ஷெல்டனையும் கடந்து வலது காலால் பந்தை அடிக்க அமரத்துவம் வாய்ந்த அந்த கோல் அடிக்கப்பட்டது.

மிகவும் லாவகமாக இங்கிலாந்து அணியைச் சேர்ந்த ஏழு வீரர்களை திணறடித்து 68 மீட்டர்கள் தனியொரு ஆளாக அந்தப் பந்தை உருட்டிச் சென்று கோல் அடித்ததை இன்றும் காணும் போது மெய்சிலிர்க்காமல் இருக்க முடியாது.

அவரது அற்புதமான ஜாலங்களால் அந்த ஆண்டு உலகக் கோப்பையை அர்ஜெண்டினா வென்றது.

சர்க்கஸ் உலகில் கோமாளி எப்படி அனைத்து வித்தைகளையும் அறிந்து உரிய நேரத்தில் அதை வெளிப்படுத்தி ரசிகர்களை உற்சாகப்படுத்துவாரோ அவ்வாறே கால்பந்து ஆடுகளத்தில் திகழ்ந்தார் டியாகோ மரடோனா.

## இடதுசாரி சித்தாந்தங்கள்

ஆடுகளத்தில் மிகச் சிறந்த ஆளுமையை வெளிப்படுத்தியது போல் அரசியல் நிலைப்பாடுகளிலும் தனது நிலைப்பாட்டை ஆழமாக வெளிப்படுத்தியவர் மரடோனா. இடதுசாரி சித்தாந்தங்களால் பெரிதும் கவரப்பட்ட அவர் அதற்காகத் தொடர்ந்து குரல் கொடுத்தார்.

கியூபாவின் அதிபராக இருந்த ஃபிடல் காஸ்ட்ரோவுடன் நெருங்கிய நட்பைப் பேணி வந்தார் மரடோனா. அதேபோல் புரட்சியாளர் சே குவேவாராவையும் ஆழமாக நேசித்தார். இருவரின் படங்களையும் தனது உடலில் பச்சைக் குத்திக் கொண்டு மாறாத அன்பை வெளிப்படுத்தினார்.




தனது இளவயதில் அவர் எதிர்கொண்ட ஏழ்மையும், சமூகச் சூழலும் அவருக்குள் கம்யூனிச சித்தாந்தங்கள் வளருவதற்கு காரணமாயிருந்தன. லத்தீன் அமெரிக்காவில் மட்டுமின்றி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல்கொடுக்க அவர் தயங்கியதில்லை.

பாலஸ்தீன மக்களுக்கான தனது ஆதரவை அவர் வெளிப்படுத்தினார். காசாப் பகுதியின் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்திய போது அதைக் கண்டித்த அவர் "மனதளவில் நானும் ஒரு பாலஸ்தீனியர்" என்று உரக்கக் குரல் கொடுத்தார்.

அமெரிக்க அதிபராக இருந்த ஜார்ஜ் புஷ்ஷைக் கடுமையாக சாடினார். இன்றளவும் வரலாற்றில் மிகவும் சர்ச்சைக்குரியதும், வலிந்த தாக்குதலுக்கு அடையாளமாகவும் பார்க்கப்படும் இராக் போரைத் தீவிரமாக எதிர்த்தார் மரடோனா. அதை வல்லாதிக்க அமெரிக்க அரசின் ஆக்கிரமிப்புப் போர் என்று கூறி அதை எதிர்க்க உலக நாடுகள் ஒன்றுகூட வேண்டும் என்று மரடோனா அறைகூவல் விடுத்திருந்தார்.

அதிதீவிர கத்தோலிக்க நாடான அர்ஜெண்டினாவின் பிரஜையாக அவர் இருந்தாலும், போப் இரண்டாம் ஜான் பாலை சந்தித்த போது அவரையும் விமர்சிக்கத் தவறவில்லை. அவரது மாளிகையின் உட்புறங்களில் பூசப்பட்டிருந்த தங்க முலாமை ஏழைக் குழந்தைகளுக்கு உதவப் பயன்படுத்தலாம் என்று கூறிய போது போப் வாயடைத்துப் போனார் என்று அப்போது பத்திரிகைகளில் செய்தி வந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.



பல பிரபலங்களைப் போல் மரடோனாவும் பல சர்ச்சைகளில் சிக்கினார். போதைப் பொருட்களின் பாவனை அவரது புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்தியது.

ஆனால் இன்று மெஸ்ஸி போன்ற பிரபலங்கள் உருவாவதற்கு ஒரு கதாநாயகனாக மரடோனா இருந்தார் என்பதை மறுக்க முடியாது.

ஆடுகளத்தில் பல அற்புதங்களைச் செய்ய முடியும் என்று காட்டிய மந்திரவாதி மரடோனாவுக்கு உலகெங்கும் இருக்கும் ரசிகர்கள் அஞ்சலி செலுத்தி வருவது அவரது ஆளுமையைப் பறைசாற்றுகிறது.

# பவத்த தேரர்கள் மோசமாக நடந்துகொண்டார்களா?

மருத்துவர் உபுல் விஜயவர்த்தன

புத்தர் உபதேசித்த ஆழமான உண்மைகளைக் கூறுவதற்குப் பதிலாக, சில தேரர்கள் கதைகள் சொல்லுவதில் நிபுணத்துவம் பெற்றிருக்கிறார்கள். இன்னும் மோசமான முறையில் அவர்கள் பொய்களைக் கூறிவருகிறார்கள். இதில் அண்மைக் காலமாக புத்தர் இலங்கையில் பிறந்தார் என்ற புரளியைப் பரப்பி வருகிறார்கள். அது உண்மையாக இருக்க நான் ஆசைப்படுகிறேன். என்றாலும், துரதிட்ட வசமாக, புத்தர் இங்கே பிறந்தார் என்பதை விட்டு விட்டு இலங்கைக்கு வருகை தந்தார் என்பதற்கு எந்த தொல்லியல் சான்றுகளும் இல்லை. அவுஸ்திரேலியாவின் பண்டே தம்மிகா அவர்கள் எழுதிய சிறந்த கட்டுரையில், இந்த நாளேட்டில் (த ஐலண்ட்) அச்சிடப்பட்டு வெளிவந்த கட்டுரை புத்தர் உண்மையில் எங்கே பிறந்தார் என்பதற்கான தொல்லியல் சான்றுகளுடன் எண்பிக்கிறது (புத்தர் இலங்கையில் பிறந்தாரா? சண்டே ஐலண்ட், 25 ஒக்டோபர்). ஆனால் இந்தத் தேரரும் அவரது ஆதரவாளர்களும் தொல்பொருள் சான்றுகளைப் புறக்கணித்து விட்டு, சொந்தமாகக் கட்டுக் கதைகளைப் புனைந்து அவற்றை சான்றுகளாகக் காட்டுவார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.



Ven. Walpola Rahula

அதிட்டவசமாக, சாதி என்பது நவீன சமுதாயத்தில் மங்கிக் கொண்டு போகும் ஒரு கட்டமைப்பாகும். அதை அரசியல்வாதிகளும், பிக்குகளும் உயிர்ப்புடன் வைத்திருக்க முயற்சிக்கின்றனர். சில பவுத்த மத பீடங்கள் சாதி அமைப்பைத் தொடர்ந்து பேணிவருகின்றன. முற்றிலும் இழிவான இந்த நடைமுறை பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. "நாம் கௌதம புத்தரை கைவிட்டு விட்டோமா" (த ஐலண்ட் மே 08, 2020) என நான் எழுதிய கட்டுரையில் விரிவாக விவாதித்திருந்தேன். இப்போது ஒரு கேள்வியை மட்டும் கேட்க விரும்புகின்றேன். சாதி அடிப்படையில் குரு தீட்சை பெறுவதைத் தடுப்பது பாசாங்குத்தனத்தின் உச்சம் இல்லையா? புத்தர் பிறப்பால் அல்ல, ஒருவரின் நடத்தையால் மட்டுமே அவன் தீண்டத்தகாதவன் அல்லது பிராமணன் என்பதைத் தீர்மானிக்கும் என்றார். (கம்னா வஸலோ ஹோதி, கம்மன ஹோதி பிரம்மனோ).



"எங்கள் கோரிக்கைகள் 48 மணி நேரத்தில் நிறைவேற்றப்படவில்லை என்றால் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவோம்" என்று ஒரு தேசிய அவசரநிலையின் மத்தியில் ஒரு தொழிற்சங்கத் தலைவர் சமீபத்தில் கூச்சலிட்டார், அது என்னை ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களுக்காக அதிர்ச்சிக்குள்ளாக்கியது. Covid-19 தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதில் தொடக்கத்தில் இருந்த பிடிப்பு என்ன காரணத்திற்காக இழக்கப் பட்டிருப்பதாகத் தோன்றினாலும், இலங்கையில் உள்ள பிரச்சினை உலகின் மற்ற நாடுகளில் நடக்கிறவற்றோடு ஒப்பிடும்போது பெரிதாக இல்லை. இங்கிலாந்தில் கொடிய வைரஸ் தொற்றுக்கு ஏறக்குறைவாக 300 பேர் ஒவ்வொரு நாளும் பலியாகிக் கொண்டிருக்கின்றார்கள். எனினும் நொருக்கப்பட்ட எங்கள் பொருளாதாரம் மோசமான சூழ்நிலையை எதிர்கொள்கிறது. இதனால் உருக்குலைந்து போன எமது பொருளாதாரம் மேலும் சவால்களை எதிர்கொள்ள வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை.

இந்தச் சூழ்நிலையில், மறைமுகமாக வேலை நிறுத்தம் என்பது முற்றிலும் பொறுப்பற்றது. இந்தத் தொழிற்சங்கம் என்பது என்ன? ஒரு செவிலியர் சங்கம். அவர்கள் தேவதூதர்கள் என்று சொல்லப்படவில்லையா? இந்தச் சங்கத்தின் தலைவர் யார்? ஒரு பவுத்த மதகுரு! "ஆரோக்கியம் தான் மிகப்பெரிய ஆதாயம்" என்றும் "எனக்கு ஊழியம் செய்யவேண்டியவன் வியாதியலாளருக்கு ஊழியம் செய்ய வேண்டும்" என்றும் புத்தர் சொன்னதை மறந்துவிட்டரா? ஒரு பவுத்த மதகுரு நோ-யாளிகளின் உயிரைப் பணயம் வைத்து ஆபத்துக்கு உள்ளாகும் படி கூறுவது, "மெத்தா (கழிவிரக்கம்) கருணா (கருணை) முதிதா (மற்றவர்களின் இன்பத்தில் தானும் இன்புறுவது) உபேக்கா -உள்ளச்சமனிலை) என்ற கருத்தாக்கங்களை அறிமுகப்படுத்திய "கருணையாளனுக்கு" (புத்தர்) செய்தமிகப் பெரிய அவமானம் ஆகும்.

இலங்கையில் உள்ள செவிலியர், தமது சொந்தத் தொழிலில் உள்ள ஒரு உறுப்பினரைக் கொண்டு தொழிற்சங்கத்தை வழிநடத்த முடியாதநிலை இருப்பது பெரும் வெட்கக்கேடானது. உலகின் முதல் பெண் பிரதமரை உருவாக்கிய நாட்டில், இன்னும் பெண்கள் ஆதிக்கம் செலுத்தும் ஒரு தொழிற்சங்கத்திற்கு தலைமை தாங்க தலைமைப் பண்புகள் கொண்ட பெண் இல்லையா? ஒரு பவுத்த மதகுரு தொழிற்சங்கத்தை, அது செவிலியர் அல்லது வேறு சங்கமாக இருக்கலாம், வழிநடத்துவது உண்மையில் ஒரு அட்டூழியம் ஆகும். அவர் அரசியல் செய்து வருகிறார் என்பது வெளிப்படை. சஜித்துக்குப் பதிலாக எதிர்ப்பு அரசியல் செய்ய அவர் முயற்சிசெய்து வருகிறாரா?

தேசத்திற்கு ஆபத்து ஏற்படும் காலங்களில் பவுத்த தேரர்கள் தேசத்தைக் காப்பாற்ற முன்வந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், அவர்களில் சிலர் பல்வேறு வேடங்களை அணிந்து கொண்டு வருகிறார்கள், ஆனால் அன்றாட அரசியலில் அவர்கள் பங்கு கொள்ள உரிமைகிடையாது. "இராஜபக்சவை ஒழித்துக் கட்ட அரசியல் சுத்தம் செய்யும் பரப்புரையில் ஈடுபட்ட பவுத்த தேரர் ஒருவரின் முயற்சியினால், ஒரு அழுகிய யாப்பாலனாயவின் ஐந்து ஆண்டு ஆட்சியை நாம் சகித்துக்கொள்ள வேண்டியிருந்தது. இப்போது பிக்குகளின் மற்றொரு குழு புதிய அரசாங்கத்திற்குக் கட்டளையிட முயன்று வருகிறது. உண்மையில், அவர்களில் ஒருவர் ஒரு செய்தியாளர் மாநாட்டில் "அவர்கள் அரசியலமைப்பைத் திருத்த விரும்பினால், முதலில் எங்கள் அனுமதியைப் பெற வேண்டும்" என்று கூறினார்! மக்களின் விருப்பத்தை நிறைவேற்றவே அரசாங்கம் இருக்கிறது, சங்கம் அல்ல என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். இலங்கை அவர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல, சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல, அனைத்து குடிமக்களுக்கும் அது சொந்தம் என்பதை அவர்களுக்கு நினைவூட்டப் பட வேண்டும்.

பவுத்த தேரர்கள் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனைய "கௌரவ" அரசியல்வாதிகளைப் போல் இழிவான முறையில் நடந்து கொண்டனர். சபை நடுவில் அமளிதுமளிகள் ஏற்பட்டன. ஏமாற்றமடைந்த பவுத்த மதத்தினர் தேரர்களுக்கு வாக்களிப்பதை நிறுத்தி விட்டனர். இருந்தும் அவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு கட்சி தேசிய பட்டியலில் ஒரு இடத்தைப் பெற்றாலும் அதைத் தொடர்ந்து வந்த படுதோல்வி இப்போதுள்ள ஐ.தே.க.வின் குறும்புத்தனத்துக்குச் சமமானது! புத்தர் அரசியலில் ஈடுபட்டாரா? ஆட்சியாளர்களுக்கு வேண்டாத அறிவுரைகளைச் சொல்லி வந்தாரா? நிச்சயமாக இல்லை. அவர் அவர்களிடம் இருந்து விலகி இருந்து கொண்டார். சில நேரங்களில் ஆட்சியாளர்கள் விரும்பத்தகாத தேர்வுகளை எடுக்க வேண்டும் என்ற உண்மையை அவர் உணர்ந்திருந்தார். கேட்டால் மட்டுமே ஆலோசனை வழங்கினார். இதற்கு மாறாக, நவீன கால "அரசியல் மதகுருமார்" சிலர் அரசர்களை உருவாக்க எத்தனிக்கிறார்கள். எத்தனிப்பது மட்டுமன்றி, அவர்கள் விரும்பியதைப் பெரும்பாலும் தனிப்பட்ட சலுகைகளை வழங்க மறுக்கும் போது அரசாங்கத்தை கவிழ்க்கப் போவதாக அச்சுறுத்துகின்றனர். ஒரு சிலரின் செயல்களினால், துரதிட்டவசமாக, முழுச் சங்கத்தையும் கறைப்படுத்துகிறார்கள். காரணம் மறைமுக நிகழ்ச்சி நிரல்கள் உள்ள பலர் இருப்பதால், ஒட்டுமொத்த சங்கத்தின் நற்பெயரைக் கெடுக்கிற வாய்ப்புக்காக ஆர்வத்துடன் காத்திருக்கிறார்கள்.

பனா உபதேசத்திற் சில தேரர்கள் பல்வேறு வேடங்களில் கட்டணம் வசூலிக்கிறார்கள் என்ற வதந்திகளை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் தர்மத்தை விற்கிறார்கள்! எவ்வாறாயினும், எனது நண்பர் ஒருவருடன் நான் நடத்திய உரையாடலில் இது முதன்முதலாக உறுதிப்படுத்தப்பட்டது. துரதிட்டவசமாக இவர் தனது மகள் புற்றுநோயால் இறந்துவிட்டார். புகழ்பெற்ற போதகரான பவுத்த தேரர் (ஹாமதுருவோ) ஒருவரை நான் ஒரு மாடகாபானாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்த போது அவர் ஒரு எனக்கொரு செய்தி அனுப்பினார். அதில் தனக்கு ரூபா 25,000 தர வேண்டும் என்று கேட்டிருந்தார். நான் அதிர்ச்சியடைந்தேன். என்னிடம் ரூபா 15, 000 மட்டும் இருந்தது. அதனை நான் அவருக்கு அனுப்பினேன். இந்தத் தேரர் பணத்துக்காகத் தனது உன்னத பொறுப்பை நிறைவேற்றினார்! இன்னும் சிலருக்குத் தங்களது சொந்த ஒலி அமைப்புப் தேவை என்று கூறி அதற்குக் கட்டணம் வசூலிக்கிறார்கள். தம்மத்தை விற்க இது ஒரு எளிய தந்திரமாகும்! ஒரு பவுத்தர் புத்தரின் உருவத்தைப் பச்சைகுத்திக் காண்பிக்கும் போது நாம் கோபப்படுகிறோம், ஆனால் மஞ்சள் அங்கி அணிந்த இந்த வணிகர்களை நாங்கள் வணங்குகிறோம், ஊக்குவிக்கிறோம்!

எந்தவொரு பிரிகாரமும் வழங்கப்படவில்லை என்ற வெளிப்படையான புரிதலின் பேரில் பனா உபதேசங்கங்களுக்கான அழைப்புகளை வண. வல்பொல இராகுலா ஏற்றுக்கொண்டது எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒரு பனா உபதேசத்திற்குப் பிறகு ஒரு குடை பெற்றதையிட்டு அவர் எவ்வளவு குற்ற உணர்ச்சியடைந்தார் என்பதை அவர் தனது எழுத்துக்களில் குறிப்பிடுகிறார். தனக்கு ஒரு குடை தேவை என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கலாம் என்று அவர் நினைக்கிறார். ஆனால் அவர் அதைப் பெற்ற நேரத்திலிருந்து, அதைப் பார்க்கும் ஒவ்வொரு முறையும், தம்மத்தை விற்றுவிட்டோம் என்ற குற்ற உணர்ச்சி அவரைப் பீடித்துக் கொண்டது. பக்தர்கள் (தேரர்களுக்கு) காணிக்கை கொடுக்க விரும்புவதை என்னால் நன்கு புரிந்து கொள்ள முடியும், அது எங்களுக்கு நல்ல கர்மாவைச் சேர்க்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். அந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்ய ஒரு தேரர் ஒரு பிரச்சாரத்ததை (pirikara) ஏற்றுக்கொண்டால் ஒருவேளை அது பாதிப்பில்லாதது என்று கருதப்படலாம். ஆனால் இலாபத்திற்காக உபதேசிப்பது முற்றிலும் இழிவானது.

சங்கத்தை விமர்சிப்பது மன்னிக்க முடியாத பாவம் என்று சில தேரர்கள் சொல்வது போல் இதை எழுதுவதன் மூலம் நான் நரகத்திற்கு என் பாதையை அமைத்துக் கொண்டிருக்கிறேன். ஒருவேளை, புத்தர் இன்று உயிருடன் இருந்திருந்தால் அவர்களுடன் அவர் உடன்பட்டிருக்க மாட்டார். அது மட்டுமல்லாமல், சங்கத்தின் சில உறுப்பினர்கள் அவருடைய பெயரில் என்ன செய்கிறார்கள் என்பதைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்து திகைத்துப் போயிருப்பார். புத்தரின் மிகப் பெரிய சாதனை, நம்முடைய விதியைத் நாமே தீர்மானிப்பதற்கு நமக்கு அதிகாரம் அளித்ததாகும். அது இயற்கை கடந்த எந்தத் தெய்வங்களிடம் இருந்தும் நம்மை விடுவிக்கிறது. அவர் எங்களுக்கு சிந்தனைச் சுதந்திரத்தை வழங்கினார். மற்றும் கேள்விகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான அறிவியல் அடிப்படைக்கு அடித்தளம் அமைத்தார்.

ஒவ்வொரு குழுவும் புரிந்துகொள்ளும் வகையில் அவர் விளக்கமளித்து, அனைவருக்கும் தனது செய்தியைச் சொல்ல வெறுங்காலுடன், இந்தியாவின் பெரும் பகுதிகளைச் சுற்றிக் கால்நடையாகச் சென்றார். அவரது பயணங்களின் போது, பெரும்பாலான இரவுகளில், புத்தர் ஒரு மரத்தின் அடியில் வானத்தை உற்றுப் பார்த்தபடி தூங்கியிருப்பார். அவரது படுக்கை ஒரு மடித்த அங்கியைத் தவிர வேறொன்றும் இருக்கவில்லை. இதற்கு மாறாக, அவரைப் பின்பற்றுபவர்களில் சிலர் இன்று என்ன செய்கிறார்கள்? அவர்கள் செல்வச் செழிப்புடன் வாழ்கிறார்கள், அறிவொளியில் பெருமை பேசுகிறார்கள், தர்மத்தை (புத்தரின் போதனைகள்) விற்று அதிகாரத்தையும் இலாபத்தையும் நாடுகிறார்கள். இது எவ்வளவு பெரிய அவமானம்?

***(நொவெம்பர் 08, 2020 அன்று த ஐலண்ட் நாளேட்டில் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம். தமிழாக்கம் நக்கீரன்)***

## நல்ல நட்பு!


ஐயம் தெளியும்
அறிவு வளரும்
உண்மை விளங்கும்
உலகம் வியக்கும்
ஏடுகள் கற்க
கேடுகள் விலகும்!
நாடுகள்அழைக்கும்
வீடுகள் போற்றும் !
குனிந்து வாசித்தால்
நிமிரச் செய்யும் !
ஊசிநூல் உலகோரின்
ஆடைகள் தைக்கும்
வாசிக்கும் நூல்களால்
உலகமே மேடையாகும் !
நல்ல நூல்களின்
நாளும் வாசிப்பு
நம்முடன் இருக்கும்
நல்ல நட்பு !

அண்ணாமலை தமிழரசி
23-11-2020

# தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்

**நவம்பர் 27, 2020 –வெள்ளிக்கிழமை. வணக்க நிகழ்வு மெய்நிகராக (Virtual) நடை பெறும்**

இன்றைய உலகம் தழுவிய வெளிப்புறச் சூழலுக்கு அமைய, தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள் வணக்க நிகழ்வுகள் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும். நாம் அனைவரும் இல்லங்களில் இருந்து, மெய்நிகர் ஊடாக இணைந்து மாவீரர்களை நினைவேந்துவோம்.




## காலை வணக்க நிகழ்வு ஆரம்பமாகும் நேரம்

| | | | |
|---|---|---|---|
| கனடியத் தேசியக் கொடியேற்றம் காலை | – 7.20 | தமிழீழத் தேசியக் கொடியேற்றம் | – 7.25 |
| மாவீரர் நினைவொலி எழுப்புதல் | – 7.35 | அக வணக்கம் | – 7.36 |
| தமிழீழத் தேசியத் தலைவர் முதன்மைச் சுடர் ஏற்றுதல் | – 7.37 | | |

Toronto: 647-619-3619 - Montreal: 514-660-5891
E-Mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.com/tamilremembrance

கனடியத் தமிழர் நினைவெழுச்சி
அகவம் - கனடா

# உலக உதைப்பந்தாட்ட இரசிகர்கள் தங்கள் நாயகன் மரடோனாவை இழந்தார்கள்...

## மறைந்த உதைப்பாந்தாட்ட ஜாம்பாவானுக்கான ஆர்ஜென்டினாவில் 3 நாட்கள் தேசிய துக்கம் அனுஸ்டிப்பு



ஆர்ஜென்டினாவின் உலக உதைப்பந்தாட்ட ஜாம்பவானான டியாகோ மரடோனா மாரடைப்பால் ஆர்ஜென்டினாவில் உள்ள தனது வீட்டில் வைத்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலமானார்.

கடந்த 1986 ஆம் ஆண்டு ஆர்ஜென்டினா அணிக்கு அணித்தலைவராக இருந்து உலகக் கிண்ணத்தை பெற்றுக் கொடுத்த மரடோனா, 1977 தொடக்கம் 1994 வரை 4 உலகக் கிண்ணங்கள் உட்பட ஆர்ஜென்டினா அணிக்காக 91 போட்டிகளை விளையாடியுள்ளார்.

1997 இல் அனைத்து வகையான தொழில்முறை கால்பந்து போட்டிகளிலும் இருந்து ஓய்வு பெற்ற மரடோனா, அதன் பின் முகாமையாளராக புதிய பரிணாமம் எடுத்தார்.

முன்கள வீரரான மரடோனா, தான் விளையாடிய காலங்களில் 491 போட்டிகளை விளையாடி 259 கோல்களை அடித்துள்ளார். அவற்றில் 34 கோல்களை ஆர்ஜென்டினாவுக்காக அடித்துள்ளார்.

கடந்த 2008இல் ஆர்ஜென்டினா கால்பந்து அணியின் முகாமையாளராக பொறுப்பேற்ற மரடோனா, 2010 உலகக் கிண்ணம் வரை அவ்வணிக்கு முகாமையாளராக செயல்பட்டார்.

தனது தொழில்முறை உதைப்பந்தாட்ட காலத்தின் இரண்டாம் பகுதியில் போதைப்பொருள் பழக்கத்திற்கு உள்ளான அவர், 1991 இல் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 15 மாதங்கள் தடைக்குள்ளாக்கப்பட்டர்.

கால்பந்து உலகின் ஜாம்பவானாக கருதப்படும் மரடோனா, கடந்த மாதம் மூளையில் ஏற்பட்ட இரத்த கசிவுக்கு வெற்றிகரமாக சத்திரசிகிச்சை செய்து வீட்டுக்கு திரும்பிய நிலையிலேயே மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

அவரின் இழப்பு அனைத்து உதைப்பந்தாட்ட ரசிகர்களையும் பலத்த சோகத்தில் உள்ளாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் மரடோனாவுக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு உயிர் பிரிந்தது. அவரது திடீர் மறைவு கால்பந்து ரசிகர்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தி இருக்கிறது. அவரது மறைவையொட்டி அர்ஜென்டினாவில் 3 நாட்கள் தேசிய துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. முன்னாள் மற்றும் இந்நாள் வீரர்கள் உட்பட பலரும் மரடோனா மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ளனர்.




MONEY PROBLEMS?

பணச்சிக்கலா?




0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

4 இடங்களில் சேவை

றொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா

வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077

# இவ்வார ராசிபலன்

**27-11-2020 வெள்ளி தொடக்கம் 02-12-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** உபயோகமும் உன்னதமும் நிறைந்த நல்ல வாரம். வெகுமதி பெருகும். வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். உத்தியோகம் இடமாற்றம் ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். உடல்நலனில் அக்கறை தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. திடீர் செலவு ஏற்படும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சந்திர பகவான். அதிர்ஷ்ட எண்: 6,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,L




**ரிஷபம்:** பூமியால் லாபமும் புத்திர யோகமும் கிடைக்கக்கூடிய வாரம். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் தேவைகள் அதிகரிக்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். மங்கள செய்தி வரும். மாணவர்கள் உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். நிதானம் நல்லது.
வழிபடவேண்டிய தெய்வம்: வீர விநாயகர். அதிர்ஷ்ட எண்: 9,6,4,7
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு. அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,H




**மிதுனம்:** சந்தோஷமான நிகழ்வுகளும் சாதகமான சூழ்நிலைகளும் உள்ள யோகமான வாரம். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. புண்ணியஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: பாதள பைரவர். அதிர்ஷ்ட எண்: 5,0,5,4
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு. அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,A




**கடகம்:** செல்வாக்கு மூலமாகவே செல்வாக்கு உயரக்கூடிய வாரம். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். கன்னிப் பெண்களுக்கு சுபச் செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பழைய கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வீர அனுமன். அதிர்ஷ்ட எண்: 8,5,1,3
அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,L




**சிம்மம்:** பணிவான பேச்சுக்களால் பணவரவை காத்துக் கொள்ளக்கூடிய வாரம். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். முதலீடு உண்டாகும். தொலை தூர தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசு கரையாது. நினைத்தது நடக்கும். அதிதேவதை வழிபாட்டால் ஐஸ்வர்யம் கூடும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். செலவுகள் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சித்ர குப்தர். அதிர்ஷ்ட எண்: 2,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Q




**கன்னி:** தேவைகள் பூர்த்தியாகி ஆசைகள் நிறைவேறும் அற்புத வாரம். மகிழ்ச்சி அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. வரவுகள் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. மறைமுக எதிர்ப்பு விலகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீராம பிரான். அதிர்ஷ்ட எண்: 0,7,2,9
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே. அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,X





**துலாம்:** போட்டி, பொறாமைகள் மறையக் கூடிய மகத்தான வாரம். தங்க நகைகள் சேரும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்கள் கவனம் தேவை. கடன் சுமை அதிகரிக்கும். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பிரார்த்தனையால் பலன் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: குரு பகவான். அதிர்ஷ்ட எண்: 2,1,0,8
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,D




**விருச்சிகம்:** பயணங்களால் பணவரவு கிடைக்கக்கூடிய பகட்டான வாரம். பணியில் உயர்வு உண்டு. புதிய பதவிகள் கிட்டும். உடல் நலம் சீராகும். மற்றவரால் பாராட்டுப்படுவீர்கள். பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புகள் கூடும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். வழிபடவேண்டிய தெய்வம்: ஐங்கரன். அதிர்ஷ்ட எண்: 1,2,6,9 அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,N




**தனுசு:** எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்த படியே நடக்கக்கூடிய எதார்த்தமான வாரம். குதூகலப் பயணம் உண்டு. நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். இனிக்கும் சம்பவம் அமையும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். தொழில் நிம்மதி கொடுக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். நல்வர் நட்பு உருவாகும். தோல்வி நிலை மாறும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். வழிபடவேண்டிய தெய்வம்: குபேர பகவான். அதிர்ஷ்ட எண்: 7,4,6,9 அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**மகரம்:** வம்பு தும்புகள் ஒழிந்து வரவுகள் அதிகரிக்கக்கூடிய வாரம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். பணப்பற்றாக்குறை நீங்கும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். ஆரோக்கியம் அதிகரிக்கும். வழிபடவேண்டிய தெய்வம்: ஆறுமுகப் பெருமாள். அதிர்ஷ்ட எண்: 8,6,2,9 அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,O




**கும்பம்:** கலைந்த குடும்பம் ஒன்று சேரக்கூடிய கலகலப்பான வாரம். முத்தான வாய்ப்புகள் பெருகும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். கௌரவமான வாரம். கலைத் தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிட தொழில் கவனம் தேவை. புதிய முதலீடு உருவாகும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். வழிபடவேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை. அதிர்ஷ்ட எண்: 1,3,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Z




**மீனம்:** பணவரவில் லாபமும் உடல்நலத்தில் ஷேமமும் கிடைக்கக்கூடிய வாரம். நட்டம் இல்லாத நாள். பட்டம் பதவி வந்து சேரும். யோகமான வாரம். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணியஸ்தலம் செல்ல வேண்டி வரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். சட்டம் சாதகமாகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: கஜமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 4,2,0,7
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,T




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்



PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point



துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.
Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000


# The Importance of Vitamin D

Vitamin D is required for the regulation of the minerals calcium and phosphorus found in the body. It also plays an important role in maintaining proper bone structure. Although we can find many foods in the supermarket that have been fortified with a synthetic form of vitamin D, there are only a select number of foods that naturally contain vitamin D.

Normally, the human body makes vitamin D. Exposure to sunlight is the catalyst for the synthesis of this hormone in the skin. But today, many people spend countless hours indoors, and exposure to the sun is limited. This may be a cause of many ailments, including a depressed mood and weak bones. With age, bones can become weak and thin. Although you can't turn back the hands of time, good nutrition is one of the best ways to encourage your body to be its best. Vitamin D is one nutrient in particular that supports normal bone density and strength. Vitamin D (also referred to as "calciferol") is a fat-soluble vitamin that is naturally present in a few foods, added to others, and available as a dietary supplement. It is also produced endogenously when ultraviolet rays from sunlight strike the skin and trigger vitamin D synthesis.

*- By: Jyotsna Inthunathan*

மலேசிய மடல்:

# இணைய வகுப்புகளில் மாணவர் ஈடுபாடு மந்தம் அறிமுகம் செய்துவிட்டு காணாமல் போகின்றனர் இடைநிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஆதங்கம்

கோலாலம்பூர், நவ.27:

பொது விடுமுறை, வார விடுமுறை, பள்ளிப் பருவ விடுமுறை, ஆண்டு விடுமுறை, தற்கால கொரோனா கால விடுமுறை என்றெல்லாம் விடுமுறைக் காலத்திலும்கூட வீட்டில் பணிச் சுமையுடன் இருப்பவர்கள் சாமுதாயத்தின் மாண்புக்குரிய ஆசிரியப் பெருமக்கள்தான்.

ஆவர்கள் தற்பொழுது, பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ள சூழலிலிலும் அன்றாட அட்டவணைப்படி பாடங்களை நடத்தி வருகின்றனர். இவ்வாறு இணைய வகுப்புகளை நடத்தும்பொழுது, மாணவர் தரப்பிலிருந்து போதிய ஒத்துழைப்பும் அக்கறையும் வெளிப்படாததால், இனம்புரியாத சங்கடத்திற்கும் சஞ்சலத்திற்கு ஆளாகி வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

புலனக் குழுக்களின்வழி முன்னறிப்பு செய்துவிட்டு ஏற்பாடு செய்யும் இணைய வகுப்புகளில் இணையும் மாணவர் எண்ணிக்கை சராசரியாக கால் பங்கு என்னும் அளவிற்குத்தான் இருக்கிறது. 32 மாணவர்கள் கொண்ட வகுப்பிலிருந்து நேற்று காலை வகுப்பில் ஐந்து மாணவர்கள் மட்டுமே கலந்து கொண்டனர் என்று பத்துமலை, தாமான் ஸ்ரீ கோம்பாக் ஹில் கிரெஸ்ட் இடைநிலைப் பள்ளியைச் சேர்ந்த கணித ஆசிரியரான மு. கலைவாணன் தெரிவித்தார்.

கல்வியில் அக்கறையும் எதிர்கால விழிப்புணர்வும் மிக்க மாணவர்கள் எந்த சுழ்நிலையையும் சமாளித்து வகுப்புகளுக்கு வருவதுடன், தனிப்பட்ட முறையிலும் நன்கு கற்று வருகின்றனர். இருந்தபோதும் இப்படிப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை குறைந்த அளவில்தான் இருக்கிறது.



எஸ்பிஎம் மாணவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் எதிர்கொண்டுள்ள தேர்வில் அக்கறை காட்டி வருகின்றன. பொதுவாக, எஸ்பிஎம் மாணவர்கள், வெளியுலக வாழ்க்கைக்கு தங்களை அணியப்படுத்திக் கொண்டிருப்பதால் தங்களின் தேர்வில் முடிந்தவரை ஈடுபாடு கொண்டிருக்கின்றனர்.

இதில், முதலாம் படிவத்தில் இருந்து 4-ஆம் படிவம் வரைப்பட்ட மாணவர்கள்தான், ஒருவித அலட்சிய மனநிலையில் காணப்படுகின்றனர் என்று இதேப் பள்ளியைச் சேர்ந்த இன்னோர் ஆசிரியையான திருமதி மோகனவள்ளி கருத்து தெரிவித்துள்ளார்.

ஒருசில மாணவர்கள், தங்கள் விட்டில் இணைய வசதி இல்லாமலும் விவேக தொலைபேசி இன்றியும் சிரமப்படுகின்றனர் என்பது உண்மைதான். அப்படிப்பட்ட மாணவர்களை நினைத்து கவலையாக இருக்கிறது. அதேவேளை, பெரும்பாலான மாணவ - மாணவியருக்கு இந்தச் சிக்கல் இல்லை. இருந்தபோதும் வகுப்புகளைப் புறக்கணித்து வருகின்றனர்.

இன்னும் சில மாணவர்கள், இணைய வகுப்பு தொடங்கும் நேரத்தில் வந்து கலந்து கொண்டுவிட்டு, பின்னர் கணினியையோ அல்லது திறன்பேசியையோ நிறுத்திவிட்டு வேறு வேலையில் கவனம் செலுத்துகின்றனர். வேறு சில மாணவர்கள், ஆரம்பத்தில் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு பின்னர் காணாமல் போய்விடுகின்றனர். பாடத்தின் இடையிடையே ஏதும் கேள்வியோ விளக்கமோ கேட்டால் மறுமுனையில் இருந்து எந்த பதிலும் வருவதில்லை. பெற்றோர், தங்களின் சிரமத்திற்கு இடையே பிள்ளைகளுக்கு தேவையான வசதியை ஏற்படுத்திக் கொடுத்த போதிலும் அதை வகையாக பயன்படுத்த அதிகமான மாணவர்கள் தவறி வருகின்றனர்.



இதன் தொடர்பில், பெற்றோர்கள் சற்று கவனமாக இருப்பது நல்லது. விட்டிலிருந்தபடி இணைய வகுப்பில் கலந்து கொள்ளும் தங்கள் பிள்ளைகளுக்கு உரிய ஆலோசனையும் அறிவுரையும் வழங்கினால் நல்லது என்று ஸ்ரீ சிப்பாங் இடைநிலைப்பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர் தயாளன் சன்னாசி கருத்து தெரிவித்தார்.

இதற்கிடையில், பிடி3 வகுப்பில் படிக்கும் மாணவர்கள் வரும் கல்வி ஆண்டில் நான்காம் படிவத்திற்கு செல்லவிருக்கின்ற நிலையில் அவர்களை எவ்வாறு வகைப்படுத்துவது என்பதன் தொடர்பில் ஆசிரியர்களும் பள்ளி நிருவாகமும் ஒரு தேக்க நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

நான்காம் படிவத்தில் கல்வியைத் தொடரும் மாணவர்கள், அறிவியல் பிரிவு, கலைப் பிரிவு மற்றும் கணக்கியல் பிரிவு என பெரும்பாலும் மூன்று பிரிவுகளில் வகைப்படுத்தப்படுவர். அதற்கு ஏதுவாக, அவர்களின் பிடி3 தேர்வு முடிவு அளவுகோலாகப்பயன்படுத்தப்படும்.

இந்த ஆண்டு இதுவரை அதற்கான வாய்ப்பு இல்லாதபட்சத்தில் பிபிடி (Pentaksiran Bilik Darjah) என்னும் வகுப்பறை மதிப்பிட்டைக் கொண்டுதான் அவ்வாறு செய்ய வேண்டுமா என்பதுகூட இன்னும் உறுதியாகத் தெரியவில்லை என்று மோகனவள்ளி இதன் தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

எது எவ்வாறாக இருந்தாலும், இந்திய சமுதாய மாணவர்கள், கல்வி ஒன்றுதான் தங்களின் எதிர்கால ஒளிவிளக்கு என்பதை உணர்ந்து, தத்தம் ஆசிரியர்களின் பார்வையில் இருந்து விலகி இருந்தாலும் பொறுப்புடன் கல்வியில் அக்கறை செலுத்தி வரவேண்டும் என்று இடைநிலைப் பள்ளி ஆசிரியர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

*நக்கீரன் - Nakkeeran 013-244 36 24*
*(கோலாலம்பூர்)*





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 922



## புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயில் பம்பலப்பிட்டி, கொழும்பு

'' சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ்நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவாதவர்க் கொரு தாழ்வில்லையே.''

கனவிலே தோன்றிய கந்தவேளின் வேண்டுகோளை ஏற்ற பக்தர்கள், தாம் தங்கிய இடங்களில் வேலினை வைத்து உபயகதிர்காமம் எனப் பெயர் சூட்டி, ஆடிவேல்விழாவினை தங்கியிருந்த இடங்களிலேயே கொண்டாடி மகிழ்ந்தனர். இவ்வாறான சூழ்நிலையில் ஆரம்பிக்கப்பட்ட ஆலயங்களுள் ஒன்றாக, பம்பலப்பிட்டியிலுள்ள புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயில் காணப்படுகின்றது. ஆரம்பகாலத்தில் மிகச் சிறிய மாடக்கோயிலாக உருவாகிய இக்கோயில், தற்காலத்தில் மிகப் பெரிய ஆலயமாக விளங்குகின்றது.

இவ்வாறு உருவான ஆலயத்தின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, தர்மகர்த்தாசபை ஒன்றினை நிறுவி, ஆக்கபூர்வமான வேலைகளைச் செய்ய நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர் தீர்மானித்தனர். இந்நிலையில் இறைபக்தி மிக்கவரான திரு பழனியப்பச்செட்டியார், செட்டியார் தெருவிலுள்ள புதிய கதிரேசன் கோயிலையும், பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோயிலையும் அபிவிருத்தி செய்ய முன்வந்தார். இந்த நல்லெண்ணத்தின் வெளிப்பாடாக, அடியார்கள், அன்பர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் அவ்வப்போது ஆலயத்தை புனருத்தாரணம் செய்தார். ஆன்மீக உணர்வும், இறைபணியில் பெருவிருப்பும் கொண்ட திரு. பழனியப்பசெட்டியார், 1958 ஆம் ஆண்டு கொழும்பிலுள்ள கதிர்வேலாயுதசுவாமி கோயிலின் தர்மகர்த்தாசபைத் தலைவராக நியமனம் பெற்றார்.

காலத்திற்குக் காலம் செய்யப்பட்ட திருப்பணிகளினால், தற்காலத்தில் அழகிய கலைவேலைப்பாடுகளுடனும், சகல வசதிகளுடனும் கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயில் காணப்படுகின்றது. 1958 ஆம் கப் பொறுக்கேற்றகாலத்தில், இங்கு விநாயகர், இடும்பன், நாகர் ஆகிய மூன்று தெய்வங்களுமே வைக்கப்பட்டிருந்தன. ஆனால் மேலும் பல விக்கிரகங்களை அமைத்து, இவ்வாலயத்தைப் பூரண ஆலயமாக்கவேண்டும் என்ற எண்ணம், தர்மகர்த்தா சபைக்குத் தோன்றியது. இதுவே திரு. பழனியப்பசெட்டியாரின் அவாவாகவும் இருந்தது.

இறைவன் அனுக்கிரகமும், செட்டியார் அவர்களுடைய எண்ணமும் ஒன்றுபட்டமையால், தர்மகர்த்தா சபையினர் செட்டியாருடைய கருத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினர். உடனடியாக ஆலயத்தை அபிவிருத்தி செய்யும் பணியில் செட்டியார் ஈடுபட்டார். இந்தியாவிலுள்ள மகாபலிபுரத்திலிருந்து நவக்கிரகங்கள் கொண்டுவரப்பட்டு, நிறுவப்பட்டன. திரு. பழனியப்பசெட்டியாரின் மகள் திருமதி மீனாட்சி வினைதீர்த்தான் அவர்களால், காசியிலிருந்து காசிலிங்கம் கொண்டுவரப்பட்டு கோயிலுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. மிதுலைப்பட்டியிலிருந்து அம்பாள், ஆவுடையார் ஆகிய தெய்வத்திருவுருவங்கள் கொண்டுவரப்பட்டன.

இவ்வாறாக ஆலயம் படிமுறைவளர்ச்சியைப் பெற்றுவந்த நிலையில், 1981 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆந் திகதி நயினாதீவு பிரம்மஸ்ரீ சி. பரமேஸ்வரக் குருக்கள் தலைமையில், அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நிறைவேறியது. விக்னம் தீர்க்கும் விநாயகப் பெருமானின் அருளும், புகழும் எங்கும் பரவ, பக்தர்கள் கூட்டமும் பெருகியது. பக்தர்கள் வேண்டுவதையெல்லாம் வேண்டிய வேளையில் அள்ளிக்கொடுத்த காரணத்தால், பெருகிய கூட்டத்திற்கு ஆலயத்தில் இட வசதி போதாது காணப்பட்டது. அத்தோடு சரிவர இந்துமதக் கிரியைகளை நடத்துவதற்கும் இடவசதி தடையாக அமைந்தது.

ஆலய செயற்பாடுகளுக்கு இடவசதி போதுமானதல்ல என்பதை அனுபவ வாயிலாகக் கண்ட தர்மகர்த்தா சபையினர், ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்ய விரும்பினர். அவ்வாறே செய்தும் முடித்தனர். ஆலயத்திருப்பணி வேலைகளில் மட்டும் கவனம் செலுத்தாது, சமூக, சலாச்சார பணிகளையும் உயர்நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு செயற்பட ஆரம்பித்தனர். இவற்றின் வெளிப்பாடாக, முத்தமிழையும் போற்றி வளர்க்கவேண்டும் என்ற உயர்நோக்கில், விழா மண்டபம் ஒன்றினை அமைப்பதென 21-10-1972 ஆம் ஆண்டு தீர்மானித்தனர்.

தர்மகர்த்தசபையினர் தாம் நிறைவேற்றிய தீர்மானத்தோடு அமையாது, இதே ஆண்டு புதிய கதிரேசன் மண்டபத்தினை சகல வசதிகளோடும் கட்டி முடித்தனர். கலைவடிவமாக இறைவனைப்போற்றும் நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினர், தமிழ் வளர்ச்சிக்குச் செய்த பெரும்பணியாக இதனைக் கருத முடியும். நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினரை மட்டுமே முற்று முழுதாகக் கொண்டிருந்த தர்மகர்த்தா சபை, தாம் புகுந்த இடத்திலே மேற்கொண்ட பணிகளினால் மேலும் உயர்ச்சியும் பெருமையும் கொண்டவர்களாக விளங்கினர். இவர்களது அயராத முயற்சியின் காரணமாக மிகச் சிறிய மடாலயமாகக் காணப்பட்ட கொழும்பு புதிய கதிரேசன் ஆலயமும் அதனோடு அமைந்த விழா மண்டபமும் நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினரின் சமய, சமூக அக்கறையை எடுத்துக் காட்டுவதாகக் காணப்பட்டது.

வளரும்...



# இப்பொழுது கனடாவிலும் கிடைக்கின்றது!









# அன்பின் தொனி - 588

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள்**

பூமியின் குடிகளே, நீங்கள் எல்லாரும் தேவனுக்கு முன்பாகக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். அவர் நாமத்தின் மகத்து வத்தைக் கீர்த்தனம்பண்ணி, அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங்கள். தேவனை நோக்கி: உமது கிரியைகளில் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறீர், உமது மகத்துவமான வல்லமையினிமித்தம் உம்முடைய சத்துருக்கள் உமக்கு இச்சகம்பேசி அடங்குவார்கள். பூமியின்மீதெங்கும் உம்மைப் பணிந்துகொண்டு உம்மைத் துதித்துப் பாடுவார்கள், அவர்கள் உம்முடைய நாமத்தைத் துதித்துப் பாடுவார்கள் என்று சொல்லுங்கள். அவர் மனுபுத்திரரிடத்தில் நடப்பிக்குங் கிரியையில் பயங்கரமானவர். கடலை உலர்ந்த தரையாக மாற்றினார், ஆற்றைக் கால்நடையாய்க் கடந்தார்கள், அங்கே அவரில் களிகூர்ந்தோம். அவர் தம்முடைய வல்லமையினால் என்றென்றைக்கும் அரசாளுகிறார், அவருடைய கண்கள் ஜாதிகள்மேல் நோக்கமாயிருக்கிறது, துரோகிகள் தங்களை உயர்த்தாதிருப்பார்களாக. ஜனங்களே, நம்முடைய தேவனை ஸ்தோத்திரித்து, அவரைத் துதிக்குஞ்சத்தத்தைக் கேட்கப்பண்ணுங்கள். அவர் நம்முடைய கால்களைத் தள்ளாடவொட்டாமல், நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார். தேவனே, எங்களைச் சோதித்தீர், வெள்ளியைப் புடமிடுகிறதுபோல எங்களைப் புடமிட்டீர். எங்களை வலையில் அகப்படுத்தி, எங்கள் இடுப்புகளின்மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர். மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப்பண்ணினீர், தீயையும் தண்ணீரையும் கடந்துவந்தோம், செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர். சர்வாங்க தகனபலிகளோடே உமது ஆலயத்திற்குள் பிரவேசிப்பேன், என் இக்கட்டில் நான் என் உதடுகளைத் திறந்து, என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன். ஆட்டுக்கடாக்களின் நிணப்புகையுடனே கொழுமையானவைகளை உமக்குத் தகனபலியாக இடுவேன், காளைகளையும் செம்மறியாட்டுக் கடாக்களையும் உமக்குப் பலியிடுவேன். தேவனுக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள், அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன். அவரை நோக்கி என் வாயினால் கூப்பிட்டேன், என் நாவினால் அவர் புகழப்பட்டார். என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார். மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

**- சங்கீதம் 66: 1-20**

**தேவனைப் பாடி, அவருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுங்கள்**

தேவன் எழுந்தருளுவார், அவருடைய சத்துருக்கள் சிதறுண்டு, அவரைப் பகைக்கிறவர்கள் அவருக்குமுன்பாக ஓடிப் போவார்கள். புகை பறக்கடிக்கப்படுவதுபோல அவர்களைப் பறக்கடிப்பீர், மெழுகு அக்கினிக்குமுன் உருகுவதுபோல துன்மார்க்கர் தேவனுக்குமுன் அழிவார்கள். நீதிமான்களோ தேவனுக்குமுன்பாக மகிழ்ந்து களிகூர்ந்து, ஆனந்தசந் தோஷமடைவார்கள். தேவனைப் பாடி, அவருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுங்கள், வானாந்தரங்களில் ஏறிவரு கிறவருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருடைய நாமம் யேகோவா, அவருக்கு முன்பாகக் களிகூருங்கள். தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார். தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார், துரோகிகளோ வறண்ட பூமியில் தங்குவார்கள். தேவனே, நீர் உம்முடைய ஜனங்களுக்கு முன்னே சென்று, அவாந்தரவெளியிலே நடந்துவருகையில், பூமி அதிர்ந்தது, தேவனாகிய உமக்கு முன்பாக வானமும் பொழிந்தது, இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற தேவனுக்கு முன்பாகவே இந்தச் சீனாய்மலையும் அசைந்தது. தேவனே, சம்பூரண மழையைப் பெய்யப்பண்ணினீர், இளைத்துப்போன உமது சுதந்தரத்தைத் திடப்படுத்தினீர். உம்முடைய மந்தை அதிலே தங்கியிருந்தது, தேவனே, உம்முடைய தயையினாலே ஏழைகளைப் பராமரிக்கிறீர். ஆண்டவர் வசனம் தந்தார், அதைப் பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி. சேனைகளின் ராஜாக்கள் தத்தளித்து ஓடினார்கள், வீட்டிலிருந்த ஸ்திரீயானவள் கொள்ளைப்பொருளைப் பங்கிட்டாள். நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும், வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச்சிறகுகள்போலவும், பசும்பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள். சர்வவல்லவர் அதில் ராஜாக்களைச் சிதறடித்தபோது, அது சல்மோன் மலையின் உறைந்த மழைபோல் வெண்மையாயிற்று. தேவபர்வதம் பாசான் பர்வதம் போலிருக்கிறது, பாசான் பர்வதம் உயர்ந்த சிகரங்களுள்ளது. உயர்ந்த சிகரமுள்ள பர்வதங்களே, ஏன் துள்ளுகிறீர்கள், இந்தப் பர்வதத்தில் வாசமாயிருக்க தேவன் விரும்பினார், ஆம் கர்த்தர் இதிலே என்றென்றைக்கும் வாசமாயிருப்பார்.

**- சங்கீதம் 68: 1- 16**

**பூமியின் ராஜ்யங்களே, தேவனைப் பாடி, ஆண்டவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள்.**

தேவனுடைய இரதங்கள் பதினாயிரங்களும், ஆயிரமாயிரங்களுமாயிருக்கிறது, ஆண்டவர் பரிசுத்த ஸ்தலமான சீனாயிலிருந்தவண்ணமாய் அவைகளுக்குள் இருக்கிறார். தேவரீர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோனீர், தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம்பண்ணும் பொருட்டு, துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர். எந்நாளும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக, நம்மேல் பாரஞ்சுமத் தினாலும் நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே. நம்முடைய தேவன் இரட்சிப்பை அருளும் தேவனாயிருக்கிறார், ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு. மெய்யாகவே தேவன் தம்முடைய சத்துருக்களின் சிரசையும், தன் அக்கிரமங்களில் துணிந்து நடக்கிறவனுடைய மயிருள்ள உச்சந்தலையையும் உடைப்பார். உன் கால்கள் சத்துருக்களின் இரத்தத்தில் பதியும்படியாகவும், உன் நாய்களின் நாவு அதை நக்கும்படியாகவும், என்னுடைய ஜனத்தைப் பாசானிலிருந்து திரும்ப அழைத்துவருவேன், அதைச் சமுத்திர ஆழங்களிலிருந்தும் திரும்ப அழைத்துவரு வேன் என்று ஆண்டவர் சொன்னார். தேவனே, உம்முடைய நடைகளைக் கண்டார்கள், என் தேவனும் என் ராஜாவும் பரிசுத்த ஸ்தலத்திலே நடந்துவருகிற நடைகளையே கண்டார்கள். முன்னாகப் பாடுகிறவர்களும், பின்னாக வீணைகளை வாசிக்கிறவர்களும், சுற்றிலும் தம்புரு வாசிக்கிற கன்னிகைகளும் நடந்தார்கள். இஸ்ரவேலின் ஊற்றிலிருந்து தோன்றினவர்களே, சபைகளின் நடுவே ஆண்டவராகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.

**- சங்கீதம் 68: 17-26**

*தொடரும்...*



கேரளா மூலிகை மருத்துவம்

வைத்திரயர் - சஞ்சீவ ராஜூ

பரம்பரை மூலிகை வைத்தியசாலை
பதினொரு பரம்பரையாக நாடி பார்த்து உங்களது உடம்பிலிருக்கும் நோய்களைக் கண்டறிந்து அதற்கேற்ற மருந்துகளை தருகின்ற வைத்தியர் பரம்பரையைச் சேர்ந்த சஞ்சீவ ராஜூ இந்தியா முதல் மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், ஜேர்மன், லண்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று மருத்துவம் செய்த பின் தற்போது கனடா வந்துள்ளார்.

பல இடங்களில் மருத்துவம் செய்து நம்பிக்கை இழந்து விட்டீர்களா? கவலைப் பட வேண்டாம். பக்க விளைவுகளற்ற தகுந்த மருந்துகளைப் பெற்று உங்கள் வருத்தங்கள் குணமாக ஒரு முறை நம்மிடம் வாருங்கள். நல்ல தீர்வு பெற்றுச் செல்லுங்கள். இலவச ஆலோசனை வழங்கப்படும்.





வேர், பச்சை இலைகள், பட்டைகள், கிழங்குகளில் இருந்து பெறப்பட்டு பொடியாக, கசாயமாக, குளிசைகளாக, லேகியமாக இந்த இயற்கை மருந்துகள் தரப்படும். எந்தவித பக்க விளைவுகளும் கிடையாது! நம்பி வாருங்கள்! நலமுடன் வாழுங்கள்!

ஆஸ்துமா, அலர்ஜி, மூச்சுத்திணறல், தும்மல், நெஞ்சுச்சளி, தோல் வியாதி சொறியாஸிஸ், முடக்குவாதம், மூட்டு வலி, வயிற்றுவலி, இடுப்பு வலி, முதுகு வலி, கை-கால் வலி, கழுத்துவலி, ஒற்றைத் தலைவலி, பக்க வாதம், நரம்புத் தளர்ச்சி, நீரழிவு (சர்க்கரை வியாதி), சிறுநீரகக்கற்கள், வாய்வுத் தொல்லைகள், குடற் புண், இரத்த பலம் அபிவிருத்தி, ஆண்களுக்கான பிரச்சனைகள், ஆண்மைக் குறைவு, உடல் பருமன்-குறைக்க, கூட்டுவதற்கு, முடி உதிர்தல், ஞாபக மறதி, உள்மூலம், வெளிமூலம், பகந்திரி மூலம், கால் வெடிப்பு, மஞ்சட்காமாலை, வெண்குஷ்டம், பெண்களுக்கான மாதவிடாய்ப் பிரச்சனை, நெஞ்செரிதல், மலச்சிக்கல், செக்ஸ் பிரச்சினை, மன அழுத்தம், காக்கா வலிப்பு, ஞாபக மறதி, சரவாங்கி போன்ற நோய்களை மூலிகை வைத்தியம் மூலம் குணப்படுத்த முடியும். அத்துடன் கர்ப்பப்பை கோளாறுகள், குழந்தையின்மைக்கான மருத்துவத்துடன், சகல நோய்களுக்கும் சிகிச்சை செய்யப்படும். அத்துடன் போதைப் பொருட்களை உட்கொள்ளும் பழக்கத்தை மறப்பதற்கான மருந்துகளும் தரப்படும்.

2900 MARKHAM ROAD, MajesticCity UNIT L 13 ,
OPP. VASANTHAM SUPER MARKET, MARKHAM RD,
SCARBOROUGH, ON, M1X 1E6

647-294-3189

# மீண்டும் பிறப்பாயா மறையாத மாண்பினனே?

# 6ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:

29
-
02
-
1968



மறைவு:

03
-
12
-
2014

## அமரர். சத்தியபவான் சத்தியசீலன் (பவான்)

(ஐயனார் கோவிலடி சுருவில்)
(முன்னாள் வீடியோக் கலைஞர், தொழில்நுட்பவியலாளர்)
திதி: 27-11-2020

ஆண்டு ஒன்றல்ல ஆறு போய்விட்டதே
போனது எங்கே என்று பேதலிக்கும் எமக்கு
நானது இங்கேதான் என்று அடிக்கடி காட்டும் உன் நிழல்
எம் கண் முன்னே அடிக்கடி வந்து போகும்
ஊர் போற்ற வாழ்ந்தவனே..........
பாசம் எல்லாம் மனதில் சுமந்து பாரம்
உனை தாங்க முடியாது வெடித்ததுவோ
பொழுது புலர்கின்ற வேளைதனில் ஏங்க வைத்தாய்
ஊரெல்லாம் செய்தி திரட்டினாய்
உன் செய்தியை எப்படி மறப்போம், வெவ்வேறு முகங்களில், வெவ்வேறு
வடிவங்களில் எண்ணற்ற தெய்வங்களை வழிபட்டாலும் நடப்பது
ஒன்றுதான்.... அது தான் உண்மை
என்றும் உந்தன் ஆசி உன் குடும்பத்தினர்
அனைவருக்கும் கிடைக்க வேண்டி கண்ணீர் மலரால் பூசிப்போம்







03-12-2020 அன்று வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள அகிலாண்டேச்வரி அருளகத்தில் உள்ள சிறார்கள், பெரியவர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படும்

இங்கனம், உன் பிரிவால் வாடும், குடும்பத்தினர் உற்றார் உறவினர் நண்பர்கள்

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFe Financial Services Inc.
RESP Registered Education Saving Plans
40% - 20% Government Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
PARK PLAZA
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1286 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 27, 2020

# கோவிட் – 19 பரிசோதனைகளின் முடிவுகளை உடனடியாக வழங்க ஒன்ராறியோ மாகாண அரசு நடவடிக்கை

கோவிட்-19 நோய்த்தொற்று அதிகமாய் பரவும் இடங்கள், கிராமப்புறங்கள், தொலைதூரப் பகுதிகள் போன்ற இடங்களுக்கு ஒன்ராறியோ அரசாங்கம் விரைவான பரிசோதனைகளை மேற்கொண்டு, முடிவுகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்விரைவுப் பரிசோதனை நடவடிக்கையானது மருத்துவத்துறையின் முன்னணிக் களப் பணியாளர்களைப் பாதுகாக்க உதவுதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட நீண்டகால பராமரிப்பு இல்லங்களில் வசிப்பவர்கள், அங்கு பணிபுரியும் ஊழியர்கள், அங்கு வருகை தருபவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட வேலையிடங்களில் பணிபுரியும் ஊழியர்கள் போன்றோரையும் விரைவாக பரிசோதனை செய்ய உதவும். இப்புதிய நடைமுறை நோய்த்தொற்றினை உடனடியாக அடையாளம் காண்பதற்கும், நோய்த்தொற்றுப் பரம்பலைக் கட்டுப்படுத்தவும் உதவும். இதன்மூலம் நோய்த்தொற்றை அறிந்து கொள்வதற்கான பரிசோதனையை செய்துகொள்ள விரும்புவோர்க்கு அப்பரிசோதனையை செய்துகொள்வதற்கும், அதன் முடிவை உடனடியாக அறிந்து கொள்வதற்குமான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதை ஒன்ராறியோ மானில அரசு உறுதி செய்கிறது.

கிராமப்புறம் மற்றும் தொலைதூரப் பகுதிகளிலுள்ள உள்ள மருத்துவமனைகள், மதிப்பீட்டு மையங்கள் போன்றவற்றிலும், அதிக தொற்று ஏற்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் ஏற்படும் திடீர் நோய்ப்பரம்பலுக்கும் வேண்டிய பரிசோதனைகளைச் செய்வதற்குமென முதற்கட்டமாக ஒன்ராறியோ 98,000 ID NOW I பெற்றுள்ளது.



நோய்த் தொற்றைக் கண்டறிவதற்கான பரிசோதனையை செய்ய விரும்பும் ஒருவர் மேற்படி பரிசோதனையை செய்துகொள்வதற்கும், அதன் முடிவை உடனடியாக அறிந்துகொள்வதற்கும் ஆவன செய்யப்படும் என்பதை ஒன்ராறியோ அரசு உறுதிப்படுத்துகிறது. தற்போது மானிலத்தில் நடைமுறையிலுள்ள பரிசோதனை வழிகாட்டல் விதிமுறைகளுக்குள் அடங்கும் எவரும் அரசினால் மருந்தகங்கள் மற்றும் பரிசோதனை மையங்களினூடாக வழங்கப்படும் சேவையினைத் தொடர்ந்தும் பெற்றுக்கொள்ளலாம். உங்களுக்கு கோவிட்-19 நோய்க்கான அறிகுறிகள் காணப்படின், நீங்கள் கோவிட்-19 பரிசோதனையை அதற்கான பிரத்தியேக பரிசோதனை மையங்ளிலேயே மேற்கொள்ளலாம்.

*விஜய் தணிகாசலம், மானில சட்டமன்ற உறுப்பினர் (ஸ்காபரோ - றூஜ் பார்க்)*



# பாலியல் குற்றவாளிகளின் ஆண்மைத் திறன் மருத்துவரீதியாக அகற்றப்படும் என்கிறார் பாக்கிஸ்தான் பிரதமர்

பாக்கிஸ்த்தானில் பாலியல் குற்றவாளிகளில் ஈடுபடும் குற்றவாளிகளின் ஆண்மைத் திறன் மருத்துவரீதியாக அகற்றப்படும் என்று தெரிவித்துள்ளார் பாக்கிஸ்தான் பிரதமர் இம்ரான் கான். இதற்கா தண்டனை வழங்குவது தொடர்பாக கொள்கை அடிப்படையில் பிரதமர் இம்ரான் கான் ஒப்புதல் அளித்துள்ளார். பாலியல் குற்றச் செயல்கள் வயது வித்தியாசமின்றி பாகிஸ்தானில் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், மேற்படி குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டுமென அனைத்து தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர். குற்றவாளிகளை பொது இடத்தில் வைத்து தூக்கிலிடவேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பாக அரசு தீவிர ஆலோசனை மேற்கொண்டது.

இந்நிலையில், பாலியல் குற்றவாளிகளுக்கு ஆண்மையை நீக்கி தண்டனை வழங்குவதற்கும், பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிரான வழக்குகளை விரைவாக விசாரிப்பதற்கும் பிரதமர் இம்ரான் கான் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகி உள்ளது. பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தடுப்பதற்கான அவசர சட்ட வரைவை அமைச்சரவை கூட்டத்தில் தாக்கல் செய்தபோது, இந்த கடுமையான தண்டனை குறித்து முடிவு எடுக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தப் பணிகளை மிகவும் துரிதமாக செயற்படுத்துவதற்காக, பாகிஸ்த்தான் காவல்துறையில் பெண்களை அதிக அளவில் சேர்ப்பது, பாலியல் குற்றங்களுக்கான வழக்குகளை விரைவாக விசாரிப்பது, சாட்சிகளின் பாதுகாப்பு ஆகிய அம்சங்கள் இந்த வரைவு சட்டத்தில் இருந்ததாக கூறப்படுகிறது. ஆண்மை நீக்க தண்டனை ஒரு தொடக்கமாக இருக்குமென்று குறிப்பிட்டுள்ள ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர், விரைவில் இது தொடர்பாக பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படும் என்றும் கூறி உள்ளார்.

# கொக்குவில் இந்து மாணவன் செந்தூரனின் 5வது நினைவு தினம நேற்று 26ம் திகதி !

## செந்தூரன் உயிர் துறந்தும் போற்றப்படுகின்றான்! சம்பந்தர் ஐயா உயிரோடு இருந்தும் தூற்றப்படுகின்றார்!

நவம்பர் 7 திகதிக்கு முன்னர் சகல தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று 2015ல் சம்பந்தர் ஐயா கூறியிருந்தார். அனால் அவர் கூறியபடி கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை.

இந்நிலையில்தான் நவம்பர் 26 ம் திகதி சிறைக் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி ஜனாதிபதிக்கு கடிதம் எழுதிவிட்டு மாணவன் செந்தூரன் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்தான். சம்பந்தர் ஐயா சொன்ன நவம்பர் 7ம் திகதி ஒவ்வொரு வருடமும்

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca



வருகிறது. ஆனால் சிறைக் கைதிகள்தான் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை.

சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் இருக்கும் கைதிகள் செந்தூரனின் தந்தையோ அல்லது சகோதரனோ இல்லை. அல்லது அவனது நண்பர்களோ இல்லை.



செந்தூரன் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் இல்லை. அவன் எந்தவொரு அரசியல் கட்சி தலைவனும் இல்லை.

இருப்பினும் அவர்களுக்கு இல்லாத கைதிகள் விடுதலை பற்றிய கவலை அவனுக்கு இருந்தது. செந்தூரன் விரும்பியிருந்தால் மற்றவர்கள்போல் படித்து பட்டம் பெற்று சுக வாழ்வை வாழ்ந்திருக்கலாம். அல்லது வெளிநாடு சென்று வசதியாக வாழ்ந்திருக்கலாம்

அல்லது இன்று சிலர் செய்வதுபோல் நடிகர்களுக்கு 30 அடியில் கட்அவுட் கட்டி மகிழ்ந்திருக்கலாம். ஆனால் மாணவன் செந்தூரன் சிறையில் உள்ளவர்களின் விடுதலைக்காக தன் உயிரை கொடுத்துள்ளான்.

தன் மகன் தன்னை பிற்காலத்தில் பார்த்துக்கொள்வான் என்று செந்தூரனின் தாய் கனவு கண்டிருப்பார்.

தன் சகோதரன் தங்களை வாழவைப்பான் என்று செந்தூரனின் சகோதரிகள் நினைத்திருப்பார்கள். ஆனால் செந்தூரன் தன்னை பெற்று வளர்த்த தாயின் கனவை நினைக்கவில்லை. தன் கூடப் பிறந்த சகோதரிகளின் விருப்பத்தை நினைக்கவில்லை. அவனுடைய நினைவு எல்லாம் சிறையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்பது மட்டுமே.

அதற்காக அவன் தேர்ந்தெடுத்த பாதை தவறாக இருக்கலாம். ஆனால் இந்த சின்ன வயதில் அவன் செய்த அர்ப்பணிப்பு மகத்தானது.

செந்தூரனை நினைவு கூர்வோம்!

*நன்றி:- தோழர் பாலன்- முகநூல்ப் பக்கம்-* Tholar Balan